
நகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி




பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை (16.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 87

## மகிந்த, ரணில் மற்றும் சம்பந்தன் பிரசாரம் செய்ய யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு நாளை வரும் இரா. சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை வைத்தியசாலை மக்கள் பாவனைக்கு விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையை யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.கத்துருசிங்க, யாழ்.அரச அதிபர் க. கணேஷிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இவ் வைபவம் நேற்று நண்பகல் 12 மணிக்குத் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி கத்துருசிங்க, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஞானசோதி, (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் ஜனநாயகம் இல்லை; இராணுவ விசாரணையும் முரணானது

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தும் முடிபு சட்டத்திற்கு முரணானது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.இத் திட்டம் தவறானது எனக் குறிப்பிட்ட அவர், இலங்கையில் ஜனநாயகம் இல்லை எனவும் கூறினார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பிரபல வர்த்தகரின் மகன் இனந்தெரியாதோரால் கடத்தல்?

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரியிலுள்ள அவ் வர்த்தகரின் மகன் நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பம் கேட்டே அவர் கடத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை பிரஸ்தாப வர்த்தகருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நின்றதால் நேற்று (16 ஆம் பக்கம் பார்க்க)

## ...ங்குளத்தில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மாங்குளம் பகுதியில் அம்புலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளானதில் வைத்தியசாலைப் பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மல்லாவி வைத்தியசாலைக்குச் சொந்தமான மேற்படி நோயாளர் அம்புலன்ஸ் வண்டியானது மேலதிக சிகிச்சைக்காக நோயாளர் ஒருவரை அக்கராயன்குளம் வைத்தியசாலையில் அனுமதித்து விட்டுத் திரும்புகையிலேயே விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தனிநாடு அல்லாத தீர்வை பெற தமிழ்க் கூட்டமைப்புத் தயார்

## அசோசியட் பிரஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாகத் திகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுப் பிராந்திய சுயாட்சி அதிகாரம் உள்ள தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ளத் தயாராகவுள்ளதாக அசோசியட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அதன் தேர்தல் அறிக்கையில் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

பிராந்திய சுயாட்சி அதிகாரம் உள்ள தீர்வொன்றைப் (16 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவு தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (NECORD) ஊடாக மீள குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவு தொகை இதுவரை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு பதினொராவது நாளாக நாளை கையளிக்கப்படவுள்ளன.

எனவே சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை / பிறப்பு அத்தாட்சி சான்றிதழ் பத்திரத்துடன் குடும்ப பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றோடுகுறிப்பிட்ட இடங்களுக்குச்சென்று தங்களது கையொப்பத்தினை இட்டு அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் மேலும் இப்பிரிவுகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் அனுமதிக் கடிதங்களை பெறத் தவறியவர்களும் அந்தந்த இடங்களுக்குச் சென்று அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கிராம சேவைகர் பிரிவுகளும் அப்பிரிவுகளில் வசிப்போர் அனுமதிக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்களும் வருமாறு,

ஜே/61,ஜே/62,ஜே/63,ஜே/64,ஜே/65,ஜே/66,ஜே/67,ஜே/68,ஜே/69,ஜே/70,ஜே/71,ஜே/72,ஜே/73,ஜே/74 காலை 9 மணி யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.

ஜே/75,ஜே/76,ஜே/77,ஜே/78,ஜே/79,ஜே/80,ஜே/81,ஜே/82,ஜே/83,ஜே/84,ஜே/85,ஜே/86,ஜே/87,ஜே/88 மதியம் ஒரு மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்.

ஜே/91,ஜே/92,ஜே/93,ஜே/94,ஜே/95,ஜே/96, மதியம் ஒருமணி பருத்தித்துறை வீதி திவ்விய ஜீவன மண்டபம்.

ஜே/97,ஜே/98,ஜே/99,ஜே/100,ஜே/ மாலை 4 மணி கொக்குவில் மஞ்சவனப்பதி கலியாண மண்டபம்.

ஜே/101,ஜே/102,ஜே/103,ஜே/104,ஜே/105,ஜே/106,ஜே/107,ஜே/108,ஜே/109,ஜே/110,ஜே/111,ஜே/112,ஜே/113,ஜே/114,ஜே/115,ஜே/116,ஜே/117,ஜே/118,ஜே/119,ஜே/120 காலை 9 மணி பருத்தித்துறை வீதி திவ்விய ஜீவன மண்டபம்.

ஜே/121,ஜே/122,ஜே/123,ஜே/124,ஜே/125,ஜே/126,ஜே/127,ஜே/128 மாலை 3 மணி கொக்குவில் மஞ்சவனப்பதி கலியாண மண்டபம். (ச-14)

## தோசம் நீங்க நகை அன்பளிப்பு

# பத்தர்களை ஏமாற்றிய ஆசாமி மக்களிடம் வசமாக மாட்டினார்

(காரைநகர்)

உற்சவ நாட்களில் ஆலயத்தில் கலையாடி பக்தர்களிடம் நகைகளைக் கறந்த ஆசாமி ஒருவர் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார். இச்சம்பவம் காரைநகர் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவரிடம் இருந்து சுமார் 10க்கும் மேற்பட்ட பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி மகோற்சவம் ஆரம்பித்து நேற்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெற்றது.

அக்காலப்பகுதியில் கலையாடிய பிரஸ்தாப நபர் கோயிலுக்கு வருபவர்களிடம் உங்களுக்கு தோசம் இருக்கிறது. அதை நீக்குவதற்கு நகைகளை போடும் படி கேட்க அவர்களில் சிலர் சங்கிலி போன்ற நகைகளை கழற்றிக்கொடுத்துள்ளனர்.

நேற்றைய தினமும் இவ்வாறு கலையாடிய நபர் அங்கு நின்ற ஒருவரிடம் நகையைக் கேட்க அவர் தனது சங்கிலியைக்கழற்றிக் கொடுத்துள்ளார்.

பின்னர் அவர் ஆலய மடாலயத் தொண்டர்களிடம் தான் இவ்வாறு நகையைக் கொடுத்த விபரத்தைக் கூறியுள்ளார். இதன் போது சந்தேகம் கொண்ட தொண்டர்கள் அவரை விசாரித்த போது அவரிடம் சுமார் 10 பவுணுக்கு மேற்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

அடியவர்களுக்கு தேசம் நீக்குவதற்காக தான் வாங்கியதாக கூறியுள்ளார். இவரிடம் இருந்து பண்டத்தரிப்பு விலாசத்தையுடைய அடையாள அட்டை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த சில நாட்களாக இந்த நபர் மேற்படி ஆலயத்தில் கலையாடி நகைகளை கறந்துள்ளதாகவும் அவ்வாறு நகைகளை இழந்தவர்கள் காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலய மடாலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மடாலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. (ச-246)

# ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ள முடியாதவர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையங்களில் தங்கிய மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் ஆசிரியப் பயிற்சியை மேற்கொள்ள முடியாத ஆசியர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் (இசுறுபாய) ஆசிரிய கல்வி நிர்வாகிகள் கிளை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் கோப்பாய் ஆசியர் கலாசாலையில் ஆரம்பக் கல்வி, நடனம், சங்கீதம், மனைப் பொருளியல் பயிற்சிகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்துள்ள கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மலர் சின்னையா பயிற்சி பெறவுள்ள ஆசிரியர்கள் தற்போது கடமையாற்றும் அதிபரூடாக வலயக்கல்விப்பணிப்பாளரின் அனுமதியைப் பெற்று அக்கடிதங்களுடன் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார். (ச-14)

## கனேடிய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் யாழ்.வருகை

கனேடிய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் குழு இன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளைக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் இன்று நெடுந்தீவு, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய சங்கப் பிரிவுகளுக்கு விஜயம் செய்து அப்பகுதி களிலுள்ள சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பார்வையிடஉள்ளனர். (ச-3,134)

# இலங்கையில் ஜனநாயகம்...

இது தொடர்பாக நேற்று ஊடக விய லாளர்களைச் சந்தித்து உரையாடிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிவில் சட்யிங்களின் அடிப்படையில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கூட சரத்பொன் சேகாவை கைது செய்திருக்க முடியும். இராணுவச் சட்டங்கள் அடிப்படையில் அவரை ஒரு உயர் மட்ட அதிகாரி ஒருவரே கைது செய்யமுடியும்.

உலகத்தில் வேறு எங்காவது இதுபோல் நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. இராணுவ பாரம்பரியத்தைப் பொறுத்தவரை அது உலகெங்கிலும் ஒரேமாதிரியானது தான்.

அவர் நான்கு நட்சத்திர பதக்கங்களைக் கொண்ட ஜெனரல். ஒருவர் நாட்டின் தலைவருடன் ஒரு இணக்கம் இருக்கும் வரைதான் பதவியில் இருக்கமுடியும்.

எனவே இந்த உத்தரவு மேலே எங்கோ இருந்து தான் வந்திருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

ஜனாதிபதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற போதிலும் அவர் இராணுவ அதிகாரிகளின் தரவரிசையை சேர்ந்தவர் அல்ல. அரசியல் அமைப்பின் பிரகாரம் அவருக்கு கொடுக்கப்பட்ட பணி அது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஐ.நாவின் உரிமைகள் நியமத்தை அது மீறுகிறது. இலங்கையில் ஜனநாயக பெறுமானங்கள் மேம்மைப்படுத்தப் படவில்லை.

அவசர காலச்சட்டத்தின் கீழ் பொன்சேகாவை கைது செய்வதாக இருந்தால் கூட பொலிஸார் மட்டுமே கைது செய்ய முடியும். இங்கு அவசரகால விதிகள் கூட பயன்படுத்தப்படவில்லை என்று சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனது தந்தையான சரத் பொன்சேகாவை நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்க விடாது அடைத்துவைத்திருப்பதற்கான முயற்சியில் அரச தரப்பினர் ஈடுபட்டிருப்பதாக பொன்சேகாவின் மகளான அப்ஷரா குறிப்பிட்டுள்ளார். (ச-3,5,14)


## அரிசி விற்பனை

கல், மண் நீக்கப்பட்ட தரமான சிவப்பு நாட்டரிசி மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

1 Kg சிவப்பு நாட்டரிசி – ரூபாய் 50 மட்டுமே

இடம்: சிவகணேஷ் களஞ்சியம்

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(பழைய மீன் சந்தை அருகில்)

தொடர்புக்கு:– 0777283811 (890)

## கோகுல் ரவல்ஸ் Hokul Travels






திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:–

021 222 8984, 077 3747825, 077 6152992 (C-4449)

## 'ஞானச்சுடர்' விநியோகிக்க ஆட்கள் தேவை

1. வலிகாமம் 2. வடமராட்சி

தபாலகங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.

விபரங்களுக்கு: சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு (சி-4672)


# அனுமதி அட்டை கிடைக்காதோருக்கு

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்று 20 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ள ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் தமது பெயர் விபரங்களை யாழ்.கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பகுதியில் பார்வையிட முடியும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

# முகாமைத்துவக் கற்கை நெறிக்கான பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய்த்தில் நடைபெறவுள்ள முகாமைத்துவக் கற்கை நெறிக்குரிய பதிவுகள் யாவும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்டஅனைவரையும் தவறாது பதிவினைமேற்கொள்ளுமாறு இணைப்பாளர்கேட்டுக்கொண்டுள்ளார். (ச-5)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

14.03.2010-ம் திகதி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா சி.க.கூ.சங்கம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு பெற்ற இலக்கம் - 1777

2-ம் பரிசு பெற்ற இலக்கம் - 0332

3-ம் பரிசு பெற்ற இலக்கம் - 0868

ஆறுதல் பரிசுகள் (10)

| | |
|---|---|
| 1528 | 2744 |
| 3076 | 2314 |
| 0247 | 0581 |
| 2809 | 1699 |
| 1270 | 2546 |

(சி-4673)

## 19-வது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 08 1966



ஆண்டவன் பிடியில் 17 03 1991

அமரர் சிவபுரநாதர் சிவராசா (சிவன்)

(இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.)

திதி: 16.03.2010

ஆண்டு பத்தொன்பது சென்றாலும்
மீண்டும் நீ இங்கு வரமாட்டாயோ!
தூண்டு சுடரென மிளர்ந்தாய்
துயர் எம்மை விட்டு நீங்கிடாது
ஆண்டவன் அடிமலரில்
அமைதி பெறுக நின்மனம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நவாலி வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (891)

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010

எம் தீவின் பஞ்சம், பசி, வறுமை போக்க
பறந்தோடி வந்து பணி செய்திட்ட பண்பாளர்களே!
உங்கள் பணி தொடர எமது வாக்கு உங்களுக்கே!



K.N.டக்ளஸ் தேவானந்தா

9



கந்தசாமி கமலேந்திரன்
(தோழர் கமல்)
(தீவக அமைப்பாளர்)

6



சில்வெஸ்த்திரி-அலென்ரின்
(தோழர் உதயன்)
(அமைப்பாளர் யாழ்.மாவட்டம்)

12

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

வெற்றி நமதே!

செட்டிபுலம் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், வேலணை

(சி-4587)

# இன்று ஒரு தகவல்

## வள்ளலின் வாரிசு

ஆந்திரா நாட்டில் ஓர் அரசர் இருந்தார். அந்த அரசரிடம் ஓர் அமைச்சர் இருந்தார். அவருடைய பெயர் நாராயண பாஸ்கர். அவர் மிகச் சிறந்த அறிவாளி. அது மட்டுமல்ல மிகச்சிறந்த கொடையாளி.

யார் வந்து எது கேட்டாலும் இல்லையென்று சொல்லமாட்டாராம். அதன் காரணமாக அவரிடமிருந்த செல்வம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. இறுதியில் குடும்பத்துக்கென்று எதுவும் வைக்காமலேயே அவர் போய்ச் சேர்ந்து விட்டார். மகனும் இறந்து விட்டார். அந்தக் குடும்பத்தில் மிஞ்சியிருந்தது அவருடைய மருமகள், பேரன் அவ்வளவு தான். இருந்த ஒரே சொத்து பழுதடைந்த ஒரு வீடு. அந்த அம்மா மற்றவீடுகளில் வேலை செய்து தன்னுடைய பிள்ளையைப் படிக்க வைத்தார்.

அந்தப் பிள்ளை ஒரு பெரிய வள்ளலுடைய பேரன் என்பது அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தெரியும். அதனால் அவர்களும் இவனிடம் மிகவும் அன்பாகவும் அக்கறையுடனும் பழகிப் பாடம் சொல்லிக் கொடுத்தார்களாம்.

ஒருநாள் புகழ்பெற்ற கவிஞர் ஒருத்தர் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்தாராம். ஆசிரியர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது ஒரு செய்தியைச் சொன்னாராம்.

"நாராயண பாஸ்கர் என்ற வள்ளல் எனக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார். என்னைப் பாராட்டி பரிசுகளெல்லாம் கொடுத்திருக்கிறார். அந்த வள்ளல் வாழ்ந்த கிராமத்தைப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது இங்கே வந்திருக்கிறேன்" என்றாராம்.

ஆசிரியர் உடனே அந்தப் பையனைக் கூப்பிட்டு "இதோ பாருங்கள். இவன் யார் தெரியுமா?" நீங்கள் குறிப்பிடுகிற அந்த வள்ளலின் பேரன் என்று அறிமுகப்படுத்தினார்.

கவிஞரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். அந்தப் பரவச நிலையிலேயெ அந்த வள்ளலைப் பற்றிக் கவிஞப் பாட ஆரம்பித்து விட்டார்.

இந்தச் சின்னப்பையன் அதைக் கேட்டான்.

உடனே தன் கையில் அணிந்திருந்த பொன் வளையலைக் கழற்றி அந்தக் கவிஞருக்கு பரிசாகக் கொடுத்து விட்டான். எல்லோருக்கும் ஆச்சரியம்.

தாத்தா இருக்கும் நிலையில் கொடுத்தார்.

பேரன் இல்லாத நிலையிலும் கொடுக்கிறான் என்று பையனை எல்லோரும் பாராட்டினார்கள். இருந்தாலும் அவனுக்குள்ளேயே ஒரு பயம் உண்டானது. பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரும் போது பயம் இன்னும் அதிகமாயிற்று.

"அம்மா என்ன சொல்லுவாங்களோ தெரியவில்லையே. குடும்பம் இருக்கும் நிலைமையில் இப்படி நான் செய்தது தப்பா? வீட்டுச் செலவுக்கே அம்மா எவ்வளவு கஷ்டப்படுகிறார். வீட்டுக்குப் போனதும் என்ன நடக்குமா தெரியவில்லையே... பையன் பயந்து கொண்டே வீட்டுக்குள்அடியெடுத்து வைத்தான். கண்ணில் படக் கூடாது என்பதற்காக ஒருகையை பின்னால் மறைத்துக் கொண்டே இருந்தான். அம்மா இதைக் கவனித்தார்.

"ஏய்... உன் கைக்கு என்ன ஆச்சு? ஏதாவது அடிபட்டு விட்டதா? என்று கேட்டுக் கொண்டே கையை எடுத்துப் பார்த்தார். வளையலைக் காணவில்லை.

"வளையல் எங்கே?" இவன் தயங்கிக் கொண்டே நடந்ததைச் சொன்னான்.

அதைக் கேட்டதும். அன்னையின் முகம் சிவந்தது. "முட்டாளே! என்ன காரியம் செய்து விட்டாய்?" என்று கன்னத்தில் அறைந்து விட்டாள்.

"அம்மா... என்னை அடிக்காதே... ஏதோ தெரியாமல் செய்து விட்டேன்"

"மகனே! வளையலைக் கொடுத்ததற்காக நான் அடிக்கவில்லை"

"பின்னே?"

"உன் பாட்டனார் மிகச் சிறந்த வள்ளல். அவர் எதையும் அரை குறையாகச் செய்ததில்லை. அவருடைய பேரன் நீ அரை குறை வேலை செய்திருக்கிறாய்"

"என்னம்மா சொல்கிறாய்?"

"நீ ஒரேயொரு வளையலை மட்டும் தானே கழற்றிக் கொடுத்தாய். இரண்டையும் அல்லவா நீ கொடுத்திருக்க வேண்டும்... அதுதானே உங்கள் தாத்தாவுக்குப் பெருமை"

"அம்மா... தெரியாமல் செய்துவிட்டேன். அந்தக் கவிஞர் இன்றைக்கு நம்ம ஊரில் தான் தங்கியிருக்கிறார். நாளைக்குக் காலையில் அவர் எங்கேயிருக்கிறார் என்று விசாரித்து இன்னொரு வளையலையும் கொடுத்து விடுகிறேன்."

"மகனே! நல்ல செயல்களை நாளைக்கு என்று ஒத்தி போடக் கூடாது. நாளைக்கு என்ன நடக்கும் என்பது யாருக்குத் தெரியும்? இப்பவே போ"

மகன் புறப்பட்டான். பள்ளி ஆசிரியரிடம் விசாரித்தான். கவிஞர் இருக்குமிடம் தெரிந்தது. கதவைத் தட்டினான். இரவு நேரத்தில் இவனைக் கண்டதும் அவருக்கு வியப்பு. இன்னொரு கை வளையலையும் நீட்டினான். அவர் திகைத்துப் போய் நின்றார்.

இது பெரியவர்கள் கூறக் கேட்ட ஒருவரலாறு.

இந்தக் காலத்தில் இப்படிப்பட்டவர்களைப் பார்க்க முடியுமா?

வறுமை – வள்ளல் தன்மையை ஒன்றும் செய்துவிடாது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

ஒருத்தன் இன்னொருத்தனைப் பார்த்துக் கேட்டானாம்.

"ஏய்! எங்க தாத்தா உங்க தாத்தாவுக்கு நூறுரூபாய் கடன் கொடுத்திருக்கிறார். அதை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறாய்?"

"கவலைப்படாதே... எங்க பேரன் அதை உங்க பேரன் கிட்ட திருப்பிக் குடுத்துடுவான்!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆங்கில மொழிமூலக் கணனி மென்பொருள் அறிமுகம்

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தேசிய பாடசாலை, 1AB பாடசாலை, தனியார் பாடசாலை, 1C பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கற்பித்தலை வளப்படுத்தும் நோக்கில் கணனி மென்பொருள் அறிமுகமானது.

கொழும்பிலிருந்து வந்துள்ள கல்விசார் நிறுவனம் ஒன்றினால் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் அதிபருடன் IT ஆசிரியர் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் பங்குபற்றிப் பயனடையுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (2)

## பெயர் விபரங்களை பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெறவுள்ள சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் கழகங்களை சேர்ந்த சிறந்த வீர, வீராங்கனைகள் தமது பெயர் விபரங்களை அவ்வப் பிரதேச செயலகங்களிலுள்ள விளையாட்டு உத்தியோகத் தரிடம் தொடர்பு கொண்டு மேற்கொள்ளு மாறு யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஓ-30)

## சிறு கைத்தொழில் முயற்சி கடன் பற்றிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

மீள் எழுச்சித் திட்டத்தினால் ஏற்பாடு செய்துள்ள சிறு குழுக்களுக்கான சிறுதொழில் முயற்சி கடன் பற்றிய மாநாடு ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நல்லூரில் அமைந்துள்ள ஈரோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் பி.எச்.சுகததாச தலைமையில் இடம்பெறும் இம்மாநாட்டில் இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய வங்கிப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-30)

## வன்னியில் மீள ஆரம்பித்துள்ள சிறு போக நெற் செய்கை

(வடமராட்சி)

வன்னிப்பகுதியில் சிறு போக நெற்செய்கை மீண்டும் அரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நெற்செய்கையை மேற்கொள்ளாமையால் வயல்நிலங்கள் தரிசு நிலங்களாக காணப்பட்டமையால் விவசாயிகள் தற்போது குளித்து நீரைப் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. (4-10)

# மூடப்பட்ட அரசாங்க தொழிற்சாலைகளை மீண்டும் பொறுப்பேற்க நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மூடப்பட்டுள்ள அரசாங்கத்தொழிற்சாலைகளை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்குத் தற்போதுள்ள சட்டமுறைகள் போதுமானதாக அமையவில்லையெனினும் புதிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமையபுதிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு குறித்த தொழிற்சாலைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சுற்றாடல் குறித்து கவனம் செலுத்துவது போல எமது கலாசார விழுமியங்களை பேண வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும்போது அதை ஒரு பிரதேசத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் முழு நாட்டிற்குமான செயற்திட்டங்களாக முன்னெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (2-6)




இலங்கை மோட்டார் வாகனச் சங்கம் (Automobile Association of Ceylon) அதன் 105 ஆவது ஆண்டு நிறைவினை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கொண்டாடிய போது அதன் தலைவர், முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் (போக்குவரத்து) த. பேரின்பநாயகம் இலங்கை மோட்டார் வாகனச் சங்கத்துக்கு நல்கியுள்ள அயராத உதவிகளையும் பங்களிப்புகளையும் பாராட்டி அவருக்கு ஞாபகார்த்த சின்னத்தினை பரிசாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

16-03-2010

(பங்குனி 2 , செவ்வாய்க்கிழமை)

பிரதமை பின்னிரவு 4.15 மணிவரை

பூரட்டாதி காலை 7.01 மணிவரை

இராகுகாலம் 3.20-4.50 மணிவரை

சுபநேரம் 10.50 - 12.20 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சயன சுகக்குறைவு, தனவிரயம், கோபப்படுதல், காரிய அலைச்சல். |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, கலந்துரையாடல். |
| மிதுனம் | சுபநிகழ்வு, தூரதேசச் செய்தி, தேகநலன், செய்தொழில் விருத்தி. |
| கடகம் | சரீரப் பிரயாசை, வீண்பயம், திடீர் பயணம், அதிக செலவு. |
| சிங்கம் | காரிய தடங்கல், எதிர்பாராத பகை, போசன சுகம், கௌரவக் குறைவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, வாகன வசதி, முயற்சி கைகூடும், போசன சுகம். |
| துலாம் | தொழில் நன்மை, பணவருவாய், சத்துரு ஜெயம், நோய் குணமடைதல். |
| விருச்சிகம் | தாழ்ந்த சுபாவம், வேலைச்சுமை, பணக்குறைவு, போசன சுகம். |
| தனுசு | பயந்த சுபாவம், கல்வியில் மேன்மை, சுபசெலவு, வாகன சுகம். |
| மகரம் | இனிய சம்பவம், உறவினர் வருகை, வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | கடின முயற்சி, அதிக செலவு, அமைதிக்குறைவு, விவாதம். |
| மீனம் | ஆழ்ந்த சிந்தை, தொழில் முயற்சி, பெரியோர் உதவி, விருந்துபசாரம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 120 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 30 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 110 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 110 | 100 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 80 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

## வடக்கில் சொந்த பிரதேசங்களில்

# மக்கள் மீள்குடியேறுவதற்கு துரித வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக சுமார் 83ஆயிரத்து 600 பேர் வரை தமது வீடு, வாசல்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் குடியேறுவதற்காக துரிதமான வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு வடபகுதி மீள்குடியேற்ற அமைப்பின் ஏற்பாட்டாளர் எஸ்.நடராஜா ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், வடக்கின் வசந்தத்தின் இணைப்பாளருமான பசில் ராஜபக்ஷவிடம் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கமைய காங்கேசன்துறையிலுள்ள மாவிட்டபுரம், கீரிமலை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள 10 கிராமசேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளில் துரிதமான மீள்குடியேற்றத்தை ஆரம்பிக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், யுத்தம் காரணமாக வலிகாமம் பிரதேசத்திலிருந்து சென்றவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா மாத்திரமே இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணைக்குழு வடபகுதியிலுள்ள 18 அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அடையாளம் கண்டுள்ளது. இது 160 சதுரகிலோ மீற்றர் நிலப்பரப்பாகும். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் 18 வீத நிலப்பரப்பு அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. அவற்றில் 30 ஆயிரம் வீடுகளும், 300 பாடசாலைகளும், 40 தொழிற்சாலைகளும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், அந்தப் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டு வந்த 42 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் தற்போது எவ்வித விவசாய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்திலிருந்து ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்ததுடன், யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடகாலம் நெருங்கும் நிலையில் அங்கு குடியிருந்த மக்களை மீளக்குடியேற்ற அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பருத்தித்துறை, ஊரணி, வல்வெட்டித்துறை, பள்ளப்பாடு, வடமராட்சி கிழக்கு, மண்டைதீவு, வேலணை, காரைநகர், வலிகாமம் வடக்கு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் அகதி முகாம்களிலும் 69ஆயிரத்து 200 பேர் தமது உறவினர்கள்வீட்டிலும் வாழ்ந்து வருவதாகத் தெரியவருகிறது. (2-6)

## கலந்துரையாடல் இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலை அதிபர்கள் மற்றும் பகுதித் தலைவர்களுக்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-29)

## இரும்புக் கம்பியால் தாக்கியதில் இளைஞன் ஒருவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் இரும்புக் கம்பி கொண்டு தாக்கியதில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

கடந்த சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் இடம்பெற்ற சம்பவத்தில் புத்தளத்தை சேர்ந்த சதாம் (வயது-19) என்ற இளைஞனே காயமடைந்தவனாவான்.

இருவருக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலையே இதற்கு காரணம் எனவும் இரும்புக் கம்பி தாக்குதலுக்கிலக்கான இளைஞன் தலையில் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஓ-30)



ஆனைக்கோட்டை வண். சிறி வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெற்ற மடிக் கணனி கையளிப்பு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் கொடியேற்றுவதையும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.மாணிக்கராஜா, யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆகியோர் மங்கலவிளக்கேற்றுவதையும், மடிக் கணனியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மாணவி ஒருவருக்கு கையளிப்பதையும், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# பங்குனி மாதப் பலன்கள்

## மிதுனம்

*(மிருகசீரிடம் 3ஆம், 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள் வரை)*

மறறவர்கள் மதிக்கும்படி வாழ வேண்டுமென்று நினைக்கும் மிதுன ராசி நேயர்களே!

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் வலுவடைந்திருப்பதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க இயலுமா? என்பது சந்தேகம் தான். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தைக் காண இயலும்.

தொழில் ஸ்தானத்தில் இராசிநாதன், விரயாதிபதி, சகாய ஸ்தானாதிபதி ஆகிய மூன்று கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. இவற்றை அஷ்டமாதிபதி சனி பார்க்கிறார். சனி எட்டு, ஒன்பது ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால் பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் ஒழுங்காகும். பங்காளிப்பகை மாறும். பழைய கடன்கள் தீர்ந்து புதிய கடன்கள் உருவாகும்.

பணத்தேவைகள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா? என்ற சிந்தனை உருவாகும். எதைச் செய்தாலும், பொறுமையாகச் செயல்படுவது நல்லது. ஜென்ம கேது ஆன்மீக நாட்டத்தை அதிகரிக்க வைக்கும். கோவில் செலவுகளுக்கும், திருப்பணிகளுக்கும் உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

செவ்வாய் நீச்சம் பெறுவது நன்மைதான். பூமி விற்பனையால் தனலாபம் கிடைக்கும். பழைய பூமியை விற்று புதிய பூமியை வாங்குவீர்கள். ஒத்துவராத உடன்பிறப்புகள் ஒத்து வருவர்.

உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். கூட்டாளிகள் விலகினாலும், புதிய கூட்டாளிகள் வந்திணைவர். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

மார்ச் 28 ஆம் திகதி மேட ராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். இராசிநாதன் புதன் இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வருமானம் இருமடங்காகும். வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

தொழில் வளம் மேலோங்கும். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். அந்நிய தேச பயணம் கைகூடும். எண்ணியபடியே ஒருசில காரியங்களை முடித்து இதயம் மகிழும் வாழ்க்கை அமையும்.

மார்ச் 28 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்க போகிறார். 5,12 க்கு அதிபதி இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிக்கு ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பெற்றோர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

கல்யாணக் கனவுகள் நனவாகும். சனியின் பார்வை உங்கள் இராசிக்கு பத்தாமிடத்தில் பதிவதால், இக்காலத்தில் சொந்தப் பணத்தை போட்டு தொழில் தொடங்குவதை விட அரசு வழியில் அல்லது நபர்கள் வழியில் கடன் களை வாங்கி தொழில் செய்தால் கவலைகள் மாறும் கனிவான வாழ்க்கை அமையும்.

இம்மாதம் சொல்லை செயலாக்கி காட்ட, 'சொல்லின் செல்வன்' அனுமனை வழிபடுவது நல்லது. சனிக்கிழமை வழிபட்டால் சஞ்சலம் தீரும்.

## கடகம்

*(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம் ஆயிலியம்)*

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லும் கடக ராசி நேயர்களே!

பங்குனிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்க நாளிலேயே சந்திரனும், குருவும் எட்டில் சஞ்சரிக்கிறார்கள்.

எனவே திடீர் இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். வீடு மாற்றங்களைச் செய்து கொண்டால் மற்ற மாற்றங்களில் இருந்து விடுபட இயலும். யோக கிரகமான செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால் சில எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் இடையூறுகள் ஏற்படும். அதற்காக கவலைப்படத் தேவையில்லை.

அதிச்சாரமாக குரு இன்னும் சில மாதங்களில் மீனத்திற்கு செல்லும் பொழுது ஆசைகள் நிறைவேறும். பன்னிரெண்டில் கேது சஞ்சரிப்பதால் தூரதேசத்திலிருந்து அழைப்புகள் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருக்கும். சரியான அழைப்பாக இருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்வது நல்லது. இல்லையேல், சில மாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

சனி வக்ரம் பெற்று சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகள் உங்கள் மீது குற்றம் சுமத்துவர். உங்களால் தான் அந்தக் காரியம் இப்படி ஆகிவிட்டது என அங்கலாய்ப்பர்.

ஒரு சமயம் 'ஓஹோ' என்று இருந்துவிட்டு ஒருசில சமயங்களில் அதலபாதாளத்தில் விழுவது கடகத்திற்கு உரிய நிலையாகும். இருப்பினும் உங்களை கைதூக்கி விட நபர்கள் காத்திருப்பர்.

வீழ்ச்சியும், எழுச்சியும் மாறி மாறி வராமல், எழுச்சி மட்டுமே உங்கள் இல்லத்தில் இடம்பெற சிறப்பு பரிகாரங்களை நீங்கள் மேற்கொள்வது நல்லது. குறிப்பாக முருகப் பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

மார்ச் 28 ஆம் திகதி மேட ராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். 3,12 க்கு அதிபதியான புதன் 1- இல் சஞ்சரிக்கும் பொழுது புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பழைய ஒப்பந்தங்கள் கைமாறி போகலாம். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

சகோதரர்கள் நீங்கள் தொடங்கும் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். பூமி யோகம் உண்டு. நீண்ட தூரத்திலிருந்து வரும் தொலைபசி வழித் தகவல் நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

## சிவஸ்ரீ சிங்காரம்

மார்ச் 28 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4,11 க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார நிலை உயரும். புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பெண்வழி பிரச்சினைகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள். பிரபலங்களின் ஒத்துழைப்போடு பொதுச்சேவையில் ஈடுபடும் போது புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

இம்மாதம் நினைத்தது நிறைவேற குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். குரு வழிபாடு குதூகலம் வழங்கும். (தொடரும்)

## பதவி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவில் உபதலைவராக கடமையாற்றிய பொன்னுத்துரை வேலாயுதபிள்ளை எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளதால் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (4-134)

## இலங்கையின் கடற்பரப்பில் நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் நேற்று முன்தினம் 6.0 ரிக் சடர் அளவில் நிலஅதிர்வு ஒன்று பதிவாகி இருப்பதாக அமெரிக்க நிலவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும் ஆழிப்பேரலை எச்சரிக்கை எவையும் விடுக்கப்படவில்லை.

இந்து சமுத்திரத்தில் இலங்கைத் தீவுக்கு அருகில் இந்த நில அதிர்வு பதிவாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதன் சேத விபரங்கள் குறித்த உடனடித்தகவல் எவையும் இதுவரையில் வெளியாகவில்லை.

கொழும்பில் இருந்து தென்கிழக்கு கடற்பரப்பில் 730 மைல்கள் தொலைவில் இந்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

ஜப்பான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளை 6.4 மற்றும் 6.6 ரிக் சடர் அளவில் நில அதிர்வுகள் தாக்கியதைத் தொடர்ந்து இலங்கையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் மீண்டும் சிலியில் 5 முறை நிலஅதிர்வுகள் உணரப்பட்டதாக கூறப்படுகிறது.

எனினும் அவை 5 ரிக் சடர் அளவிலும் குறைவானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிலிபின்சிலும் 5 ரிக் சடர் அளவிலான நில அதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளது. (2-6)

## தெற்கிலிருந்து வடக்கிற்கு கட்டடத் தொழிலாளர்கள்

(கொழும்பு)

தென்பகுதியைச் சேர்ந்த கட்டிட தொழிலாளர்கள் பாரிய கட்டிட நிர்மாண வேலைகளுக்காக வடக்கிற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

விரைவாக வேலைகளை முடித்துக் கொடுப்பார்கள் என்பதால் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக ஒப்பந்தக்காரர்கள் கூறுகிறார்கள்.

இதனால் உள்ளூர் கட்டட நிர்மாணகாரர்களுக்கு இந்த நிர்மாண வேலைகளை செய்யும் தொழில்வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது என குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்த கட்டட நிர்மாணக்காரர்கள் கடந்த 2002 முதல் 2006 வரை வன்னி யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாணப் பணிகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## வகுப்புக்கள் நடைபெறமாட்டாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஆங்கிலக் கற்கை நெறி நாட்பாடசாலை நடைபெறமாட்டாது என திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (2)



தேசிய கல்வி நிறுவகத்தால் யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரிய கல்வியியலாளர்களுக்கான செயலமர்வு அண்மையில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் நிற்பதையும் விருந்தினர்களாக வளவாளர் எஸ்.முகுந்தன், ஜி.ரி.இசற் நிறுவன அதிகாரிகளான டாக்டர் பீற்றர், யானக ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வளவாளர் எஸ்.ஆர் சத்தியேந்திரப்பிள்ளை செயலமர்வை நடத்துவதையும் படங்களில் காணலாம்.

# தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை அரச ஊடகங்கள் உதாசீனம் செய்துள்ளன

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை அரச ஊடகங்கள் உதாசீனம் செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சகல கட்சிகளுக்கும் சமசந்தர்ப்பம் வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் அரசாங்க ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எனினும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் இந்த உத்தரவுகளை அரச ஊடகங்கள் மதித்து செயற்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை விடவும் பொதுத் தேர்தலில் அரச ஊடகங்களின் செயற்பாடு மோசமாக அமையக்கூடும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணையகமொன்று நிறுவப்படும் வரையில் இலங்கையில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# ஒரே கட்சியினருக்கிடையிலான மோதலுக்கு தேர்தல் முறைமையின் குறைபாடே காரணம்

## விமல் வீரவன்ச



(கொழும்பு) தேர்தல் முறைமையின் குறைபாடுகள்காரணமாகவே ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொள்ள நேரிடுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் முறைமை எவரையும் தமது கடமைகளை சரியான முறையில் மேற்கொள்ள அனுமதிப்பதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பாக தேர்தல் ஆணையாளர், பொலிஸார் உள்ளிட்டோர் தங்களது கடமை களை செவ்வனே மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தேர்தல் முறைமைக்கும் சட்டத்திற்கும் இடையில் காணப்படும் இடைவெளியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வடக்கில் நான்கு தேர்தல் பிரசார கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்பார்

## டளஸ் அழகப்பெரும தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இதற்கமைய பொதுத் தேர்தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கும் 26 பிரதான பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி பங்கேற்கும் முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி கண்டியில் நடத்தப்படவுள்ளதாகவும் குருநாகல், கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தலா இரு கூட்டங்கள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (2-6)

# புலம்பெயர்ந்த இலங்கையர்களும் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும்

## இணையமூடாக கோரிக்கை

(கொழும்பு)

உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர் இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென இணையமூடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களின் வாக்களிப்பு உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சுமார் 1.7 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணியாற்றி வருவதாகவும் இவர்களினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் குடியேறியவர்கள் மற்றும் பணிபுரிவோர் தற்போதைய இலங்கை தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாது.

இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிரேஷ்ட அமைச்சருமான மிலிந்த மொரகொடவினால் டபிள்யூ, டபிள்யூ, டபிள்யூ. எஸ்.எல்.என்.சீ.ஓ. ஆர்.ஜீ என்ற இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இணையதளத்திற்குள் பிரவேசித்து புலம்பெயர் இலங்கையர்களே தேர்தலில் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்க முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் தேர்தல் சமயத்தில் நாட்டில் இல்லாத ஒரே காரணத்தினால் புலம்பெயர் இலங்கையர்களின் வாக்களிப்பு உரிமை மறுக்கப்படுவதில் நியாயமில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (2-6)

# வடக்கின் தெங்கு உற்பத்திக்கு 20 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கின் தெங்கு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய விஷேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பெரும் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் டீ.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

இதற்கமைய அமைச்சரின் ஆலோசனைக்கு இணங்க வடபகுதி வீட்டுத் தோட்டங்கள் அனைத்துக்கும் தென்னம்பிள்ளைகளை வழங்க தெங்கு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இத் திட்டத்துக்காக 20 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒத்துக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு வடக்கில் 2 ஆயிரம் ஏக்கரில் தெங்குப் பயிர்ச் செய்கையை புதிதாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக 1 இலட்சத்து 40 ஆயிரம் தென்னம்பிள்ளைகள் ஒதுக்கப்பட்டதுடன் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கைக்காக 60 ஆயிரம் தென்னம்பிள்ளைகளை வழங்கப்படவுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது. (2-6)

# இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை ஆறாக குறைவடைந்துள்ளது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை ஆறாக குறைவடைந்துள்ளதென அரசாங்கம் அறிவித்துள்ளது. நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதென மேலும் குறிப்பிட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஏற்றவாறு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர் நிறைவடைந்த காலத்தில் சுமார் மூன்று இலட்சம் மக்கள் 21 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# நாம் ஆட்சியமைத்தால் எம்.பிக்களுக்குரிய சம்பளமே அமைச்சர்களுக்கும் வழங்கப்படும்

## ரவி கருணா நாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் நியமிக்கப்படும் அமைச்சர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சம்பளம் மட்டுமே வழங்கப்படும் என்று கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் எம்.பி.யுமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து வெளிவரும் தகவல்கள் தொடர்பில் ரவி கருணாநாயக்க தொடர்ந்து கூறியதாவது,

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. மக்கள் எம்மை நோக்கி அணி திரள்கின்றனர். எனவே மக்கள் மீதான சுமைகளை நாங்கள் குறைக்க வேண்டும்.

அந்த வகையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில் அந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப் படுபவர்களுக்கு எம்.பி. க்குரிய சம்பளம் மட்டுமே வழங்கப்படும்.

ஐக்கிய தேசிய முன்னணி எடுத்துள்ள இந்த தீர்மானத்துக்கு கட்சியில் அனைவரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர். அவ்வாறு எஞ்சும் நிதியையும் மக்களின் நலனுக்காக பயன்படுத்துவதே எமது நோக்கமாகும்.

கடந்த 2001-2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில் நாங்கள் இந்த அணுகு முறையை பின்பற்றினோம். அது சிறந்த முறையில் வெற்றியை தந்தது.

மேலும் நாட்டை ஆட்சிசெய்ய எதிர்பாப்பவர்கள் என்ற வகையில் எப்போதும் முன்னுதாரணமாக செயற்படவே நாங்கள் எதிர் பார்க்கின்றோம். அதனடிப்படையிலேயே இவ்வாறான தீர்மானங்களை எடுக்கின்றோம் என்றார். (2-6)

# அரசாங்கமே சரத் பொன்சேகாவை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சித்தது

## ஜே.வி.பி. தெரிவிப்பு


தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா அரசாங்கத்தினாலேயே முதல் முறையாக அரசியல் நோக்கத்துக்காக அணுகப்பட்டதாக ஜனநாயக தேசிய கூட்டணி குற்றம் சுமத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் லலித் வீரதுங்க அரசியல் பதவி ஒன்றை வழங்குவதாக கூறி சரத் பொன்சேகாவை முதல் முறையாக அணுகியதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அம்பலாங்கொட தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதாக கூறியதாகவும் அத்துடன் அரசாங்கத்தின் முக்கியஸ்தர் பதவியையும் வழங்குவதாக லலித் வீரதுங்க உறுதியளித்ததாகவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் ஆதாரங்களை திரட்டுவதில் தோல்வி கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-2)




வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் சிவசாயீஸ்வரம் எனும் பெயரில் புகவான் சத்யசாயி பாபாவுக்கு பஜனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். உயர்நீதிமன்ற நீதிபதி இ.வசந்தசேனன், வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ. சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர், பருத்தித்துறை சாயிமந்திர் தலைவர் ஆ.ஜெகநாதன் ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபடுவதையும், சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீர கத்தி விநாயகர் ஆலய விரோதி வருஷ மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 10.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 29 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு திருமஞ்சன தீர்த்தமும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுப வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7.30 மணிக்கு சப்பறமும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)




## வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் இன்று முதல் புதிய கட்டடத்தில்

(அல்வாய்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கான புதிய கட்டம் ஓராங்கட்டை ஒழுங்கை பருத்தித்துறை என்ற இடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயல்லாளர் இ.இளங்கோவன், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் ஏற்கனவே வலயக் கல்வி அலுவலகம் புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் உள்ள கட்டடத்தில் 11 வருடகாலமாக இயங்கி வந்ததாகவும் அண்மையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் குறித்த இடத்தில் இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.இக் கட்டடத்தில் நிதிக்கிளையும் கல்வி அபிவிருத்திக் கிளையும் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இக்கட்டடம் தொடர்பான தேவைகள் அடங்கிய மகஜர் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4-19)

## பாடசாலை நூலக கட்டடத் திறப்பு விழா

(அல்வாய்)

யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட நூலகக் கட்டடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைக்கவுள்ளதுடன் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4-19)

## தொழிற்பயிற்சி நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட J/268 நீர்வேலி தெற்கு (American Jewish Distribution Committee) அமெரிக்க யூவிஷ் பங்கீட்டுக் குழுவின் நீதியுதவியுடன் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை11 மணிக்கு நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதித்திட்ட முகாமையாளர் ஆர்.மோகனேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக JDC நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் டபிள்யூ.ஏச்.டபிள்யூ. சொய்சா, சிறப்பு விருந்தினராக கோப்பாய்ப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு குடிநீர்

### வேலைத்திட்டம் ஏப்ரலில் ஆரம்பம்

(வேலணை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு நீர்த் தேக்கத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு குழாய் மூலமான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உதவிப் பொது மேலாளரும் பொறியியலாளருமான தி.பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்டப் பணிக்கு உலகவங்கி சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இத்திட்டத்தின் மூலம் தீவகம், வலிகாமம், தென்மராட்சி உட்பட 13 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மக்கள் பயன்பெறமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இத் திட்டத்தின் முன் நடவடிக்கையாக உலகவங்கியின் பிரதிநிதிகள் இப்பிரதேசங்களை பார்வையிட்டதுடன் அது தொடர்பான ஆய்வு அறிக்கைகளை தயாரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இத் திட்டத்திற்காக கிளிநொச்சி மற்றும் யாழ்.மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களின் உயரதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் தங்களது ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்கவேண்டும் எனவும் இத்திட்டத்தினால் யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் உவர்நீராக மாற்றம் பெற்றுள்ள பல கிராமங்கள் நன்மையடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4-22)

## மீள் எழுச்சித்திட்ட அபிவிருத்தி வேலைகளை பார்வையிட வெளிமாவட்ட அலுவலர்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களை பார்வையிடுவதற்கு அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீள் எழுச்சித்திட்ட அலுவலர்கள் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இதனடிப்படையில் நாளையும், நாளை மறுநாளும் (புதன், வியாழன்) அனுராதபுரத்திலிருந்து வருகை தரும் 40 பேர் கொண்ட மீள் எழுச்சித்திட்ட அலுவலர்கள் யாழ்ப்பாணம், கரவெட்டிப் பகுதியிலுள்ள அந்திரான், கோப்பாயிலுள்ள கொக்கணை, மடத்தடி மற்றும் வேலணை கிழக்கு, மேற்கு ஆகிய 5 கிராமங்களுடன் வழுக்கையாற்றில் இடம்பெறும் அபிவிருத்தி வேலைகளையும் பார்வையிடவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் மட்டக்களப்பிலிருந்தும் 40 பேர் கொண்ட மீள் எழுச்சித்திட்ட அலுவலர்கள் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் யாழ்.மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் செயற்பாடு, வழுக்கையாற்று செயற்பாடுகள் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் இடம்பெறும் பால் உற்பத்தி நடவடிக்கையினை பார்வையிடவுள்ளனர்.

இங்கு வரும் அலுவலர்கள் மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளரை சந்திப்பதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பல்வேறு கிராமங்களுக்கு செல்லவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மீள் எழுச்சித்திடடம் மூலம் நடைபெறும் அபிவிருத்திப் பணிகள் தங்கள் மாவட்டத்தில் எந்த நிலையிலுள்ளது என்பது பற்றி மதிப்பீடு செய்யும் நோக்கத்துடனேயே இவர்கள் வருகை தருகின்றனர்.

(ஓ-30)


## திருமறைக் கலாமன்றத்தின் "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் காட்சி 22 இல் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் பிரமாண் டமான ஆற்றுகையான இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினைச் சித்தரிக்கும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை "வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஏழு நாள்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருப்பாடுகளின் காட்சியை பார்வையிட வருகின்ற பார்வையாளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தங்களுக்கான அனுமதிகளை மன்ற அலுவலகத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் இம்முறை யாழ். மா வட்ட மக்கள் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் திருப்பாடுகளின் காட்சியைப் பார்வையிட வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் திங்கள் முதல் வெள்ளி வரையிலான நாட்களில் இக் கட்சியை பார்வையிட வசதியுள்ளவர்கள் அந் நாட்களில் பார்வையிட்டு சனி , ஞாயிறு தினங்களில் நிகழும் சன நெரிசலை தவிர்க்க உதவுமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள இவ்வாற்றுகை ஏனைய நாட்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும். பார்வையாளர்கள் நிகழ்வு ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ





மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை தரமுயர்த்தப்பட்ட மத்திய மயப்படுத்தப்பட்ட கணனி வங்கிச் சேவையில் இணைக்கப்படுவதற்கான ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் பல.நோ.கூ. சங்கத்தலைவர் ஆர்.வன்னியசிங்கம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும், அருகில் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், கிளை முகாமையாளர் ரி.சிவக்குமாரன் ஆகியோர் நிற்பதையும், செயற்பாட்டு முகாமையாளர் எ.பிரான்சிஸ் வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வைப்பினை ஏற்பதையும் படங்களில் காணலாம்.

## இம்முறை மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவது இலகுவானது-டி.எம்.ஜயரட்ண

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் விடயத்தில் எதிர்க்கட்சியிடமிருந்து எவ்விதமான போட்டித்தன்மையையும் காணமுடியவில்லை. எனவே தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை யை இலகுவாகவே பெற முடியும் என்று எதிர்பாக்கின்றோம். எவ்விதமான போட்டித் தன்மையையும் காணமுடியவில்லை. எனவே தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இலகுவாகவே பெற முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தரும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் விடயம் குறித்து கருத்து வெளியிடுகைலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மிகவும் சிறப்பான மட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. எமது வேட்பாளர்கள் மிகவும் உற்சாகத் துடன் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சிகளிடமிருந்து எமக்கு எவ்விதமான போட்டித்தன்மையும் இல்லாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆளும் கட்சிக்குள் வேட்பாளர்களுக்கு இடையே விருப்பு வாக்கு போட்டி பாரியளவில் நிலவுகின்றது.

அத்துடன் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கட்சிக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவு அதிகமாகி வருவதை நாங்கள் உணர்கின்றோம். கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது சற்று அதிகமாகவே உள்ளது என்றார். (ஓ-2)


கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
10
04
1922

இறப்பு
13
03
2010

திருமதி
இலட்சுமிப்பிள்ளை அமிர்தலிங்கம்

நிருவத்தம்பை ஊரிக்காடு வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி *இலட்சுமிப்பிள்ளை-அமிர்தலிங்கம்* அவர்கள் (13.03.2010) சனிக்கிழமை காலை 6.45 மணியளவில் லண்டனில் காலமானார்.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரவப் பெருமானை பிரார்த்திப்பதோடு,இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னார் எமது உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவ ஆலயத்தின் நீண்ட கால அபிவிருத்தித் தொண்டரும், ஆலய வசந்த மண்டபத்தை மிகப் பிரமாண்டமான முறையில் உற்சவங்கள் சிறப்பாக நடாத்துவதற்கான முறையில் அமைத்து அன்பளிப்பு செய்த ஆலய பக்த அடியாருமாவார். அன்னாருக்கு ஆலய பிரதம குருக்கள் சார்பாகவும் நிர்வாக சபையினர் சார்பாகவும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது இழப்பால் எமது ஆலய நிர்வாக செயற்பாடுகள் பின்தள்ளப்படுவதோடு கட்டட நிர்மாணங்கள் பாதிக்கப்படுவதையும் மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு
வைரவ தேவஸ்தானம்.
பிரதம குருக்கள்மாரும்
நிர்வாக சபையினரும்.

சி/4658


## மெராக் துறைமுக இலங்கை அகதிகளுக்கான அரசியலில் தீர்வை வலியுறுத்தி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள்

(கொழும்பு)

இந்தோனேஷியா மெராக் துறை முகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு அரசியல் தீர்வு வழங்கவேண்டுமெனக் கோரி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவின் முக்கிய நகரங்களான மெல்போர்ன், கன்பரா உள்ளிட்ட நகரங்களில் பல்வேறு அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளன. கடந்த 150 நாட்களுக்கும் அதிகமாக படகில் தங்கியுள்ளஇலங்கை அகதிகளை விடுவித்து அவர்களுக்கான அரசியல் தீர்வு வழங்கவேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையிலுள்ள அகதிகளுக்கு அம்மை உள்ளிட்ட பலநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் அவர்களுக்கான மருத்துவ குறைபாடுகள் நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## காலநிலை மாற்றத்தின் விளைவால் பறவைகள் உருவத்தில் குறுகியுள்ளன

### ஆய்வு முடிபுகள்

வட அமெரிக்காவில் நூற்றுக்கும் அதிகமான பறவை இனங்களைச் சேர்ந்த சுமார் ஐந்து இலட்சம் பறவைகளைக் கொண்டு மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள் மூலம் பல பறவையினங்கள் படிப்படியாக அளவில் சிறுத்து குறுகிய சிறகுகளுடன் உருவத்தில் சுருங்கி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

50 ஆண்டுக்காலப் பகுதிக்குள் பறவையினங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வெப்ப கால நிலையின் விளைவால் ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

இந்த ஆய்வு முடிபுகளை வெளிப்படுத்தியுள்ள சுற்றுச்சூழல்துறையுடன் தொடர்புடைய ஒய்க்கோஸ் என்ற சஞ்சிகை யொன்று இந்த மாற்றம் பறவையினங்க ளுக்கு ஓரளவு ஆபத்தானது என சுட்டிக்காட்டியுள்ளது.

கரிபியன் தீவுகள் மத்திய மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்களின் குளிர்காலத்தில் பொதுவாக இந்த மாற்றத்தை அவதானிக்க முடிந்ததாக கூறுகின்ற ஆய்வாளர்கள் உடல் பருமனின் அளவில் ஏற்பட்ட மாற்றத்தை வட அமெரிக்க பிராந்தியத்திலேயே குறிப்பாக கூவும் பறவைகளிடத்தில் காண முடிந்ததாக சுட்டிக்காட்டுகின்றனர். (ஓ-6)

## நிகோட் திட்டத்தினால் வழங்கப்படும் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான உதவுதொகை

(கொழும்பு)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (NECORD) ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25000 ரூபா படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவுதொகை இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு பத்தாவது நாளாக பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை கீழ்குறிப்பிடப்படும் நேர அட்டவணையின் அடிப்படையில் அதற்கான அனுமதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன. சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சி சான்றிதழ்பத்திரத்துடன் குடும்ப பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றோடு குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்களது கையொப்பத்தினை இட்டு அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும் இப்பிரிவில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் அனுமதிக் கடிதங்களை பெறத் தவறியவர்களும் அந்தந்த இடங்களுக்குச் சென்று அனுமதிக் கடிதங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன் பிரகாரம் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 1295 குடும்பங்களுக்கான அனுமதிக் கடிதங்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

இதில் இன்று காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறைஆதிகோயில்பலநோக்குமண்டபத்தில் ஜே/385, ஜே/387, ஜே/388, ஜே /390, ஜே/391 ,ஜே/392 ஆகிய கிராம சேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கும் பிற்பகல் 1 மணிக்கு பரு. பிரதேச செயலர் மண்டபத்தில் ஜே/393, ஜே/394, ஜே/396, ஜே/398, ஜே/400 ,ஜே/401, ஜே/402, ஜே/403 ஜே/404, ஜே/406, ஜே/407, ஜே/408, ஜே/409, ஜே/410, ஜே/411, ஜே/412, ஜே/413, ஜே/414, ஜே/415 ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ளவர்களும் பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

# மீள்குடியேற்றப்படும் பகுதிகளில் இலவச மின் வழங்கல் திட்டம்

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

மீள் குடியேற்றம் இடம்பெறும் பகுதிகளில் இலவச மின்சாரம் வழங்கும் விஷேட திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி வவுனியா வடக்கில் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு இவ்வாரம் முதல் இலவச மின்சார இணைப்புகள் வழங்கப்படவிருப்பதாக அரசாங்க அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

இவ்வாறு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது முதல் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு இலவசமாக மின் விநியோகம் செய்யப்படுமெனவும் இதற்காக எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் மற்றும் கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நிறைவு செய்யப்பட்டிருக்கும் மின் இணைப்பை பெற்றுக் கொடுக்கும் 14 செயற்திட்டங்களே இவ்வாரம் முதல் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

அதன்படி கணேசபுரம், ஓமந்தை, நொச்சி, மோட்டை, கட்டான்குளம் உள்ளிட்ட 15 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள மக்கள் இவ்வாரம் முதல் மின் இணைப்பை பெற்றுக் கொள்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இவர்களை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர் அப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கே இலவச மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட 200 செயற்திட்டங்களுக்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அதில் முதற் கட்டமாக நிறைவு செய்யப்பட்டிருக்கும் 14 செயற்திட்டங்களே பொதுமக்களுக்கு இவ்வாரம் முதல் கையளிக்கப்படவிருப்பதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (2-6)

# கண்பார்வை இழப்பதற்கு காரணமான நோய்களில் குளுக்கோமா 2ஆம் இடத்தில்

## கொழும்பு கண்வைத்தியசாலை பணிப்பாளர்

(கொழும்பு)

உலக சனத்தொகையில் 10 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் குளுக்கோமா நோய்த்தாக்கத்திற்கு இலக்காகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

உலகில் கண்பார்வையை இழப்பதற்கு காரணமான நோய்களில் குளுக்கோமா இரண்டாம் இடத்தில் உள்ளதாக கொழும்பு கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஏச் .லியனகே குறிப்பிட்டார்.

நாட்டு மக்களிடத்தில் இந்நோய் தொடர்பில் போதிய தெளிவின்மையால் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளர்களே வைத்தியசாலையை நாடுவதாக அவர் குறிப்பிட்டார்.

உலகில் கண்பார்வையை இழந்த சுமார் 45 மில்லியன் பேர் உள்ளதாக சுட்டிக் காட்டிய டாக்டர் லியனகே, இதில் குளுக்கோமா நோயாளர்களே இரண்டாம் நிலையில் உள்ளதாகவும் 10 முதல் 12 மில்லியன் வரையானோர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இந்த நோய்த் தொடர்பில் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் பதிவாக வில்லையென தெரிவித்த அவர் பெரும்பாலான குளுக்கோமா குறித்து போதிய தெளிவின்மையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

எனினும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்த நோயினால் பீடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக கொழும்பு கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் கூறினார்.

கண்களிலுள்ள பார்வை நரம்பு பழுதடைவதனாலேயே முக்கியமாக இந்த நோய் ஏற்படுவதாகவும் இதில் இரண்டு வகைகள் காணப்படுவதாகவும் டாக்டர் லியனகே தெரிவித்தார்.

வேறு நோய்கள் காரணமாகவும் குளுக்கோமா நோய் ஏற்படக்கூடும் என தெரிவித்த அவர் நீரிழிவு, கண்களில் ஏற்படுகின்ற காயங்கள் போன்றவைகளாலும் பெரும்பாலானவர்கள் இந்த நோய்க்கு ஆளாவதாக சுட்டிக்காட்டினார்.

40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த நோய் குறித்து சந்தேகம் நிலவுமாயின் வருடம் ஒருமுறையேனும் மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்வது சிறந்ததாகும் என கொழும்பு கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கண்களிலுள்ள நரம்புத் தொகுதி பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு உரிய கண் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (ஓ-4)

# மருந்து மாத்திரைகளால் நீரிழிவு நோயை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது

## மருத்துவ ஆய்வு தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்து மாத்திரைகளினால் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது என பிரித்தானிய மற்றும் அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம் மற்றும் உடற்பயிற்சி ஆகியனவே நீரிழிவு நோயை கட்டுப்படுத்தக்கூடிய சிறந்த வழிமுறைகள் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோயிலிருந்து முழுமையாக விடுபடமுடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒன்பதாயிரம் பேரிடம் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருந்துகளை உட்கொள்வதனால் எதிர்காலத்தில் இருதய நோய் ஏற்படுவதனை தடுக்க முடியும் என்ற கருத்திலும் உண்மையில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும் அதனால் ஏற்படக்கூடிய ஏனைய நோய்களை கட்டுப்படுத்தவும் கூடிய மருந்துப் பொருட்களின் தேவை விஞ்சி நிற்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்போது பாவனையில் உள்ள அநேக மருந்துப் பொருட்களின் மூலம் இந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய முடிவதில்லை என சுட்டிக் காட்டப்படுகிறது. (2-6)

# இலங்கையில் முதன் முதலாக மரபணுமுறையில் ஆட்டுக்குட்டி

(கொழும்பு)

மரபணு முறையில் மாற்றியமைக்கப்பட்ட முறைமூலம் இலங்கையில் முதற் தடவையாக ஆட்டுக்குட்டியொன்றை பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவபீடம் உருவாக்கியுள்ளது.

இது நாட்டின் மரபணு தொழில் நுட்பத்தின் பாரிய வெற்றியாகுமென அந்த பீடத்தின் விரிவுரையாளர் டாக்டர் தம்பிக்க பெரேரா குறிப்பிட்டார்.

உயிரூட்டமுள்ள மரபணுக்களை சீரான முறையில் பேணுவதற்கான வசதிகள் இலங்கையில் காணப்படாமையினால் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பலனாகவே இந்த ஆட்டுக்குட்டி உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சுமார் 10 வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதிபலனாகவே இந்த ஆட்டுக்குட்டியை உருவாக்க முடிந்துள்ளதாக டாக்டர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# படகு கவிழ்ந்து பெண் பலி

கொக்கலை ஆற்றில் படகொன்று கவிழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

புகழ்பெற்ற மடொல்துவ பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் மேலும் இரு பெண்கள் நீருள் மூழ்கிய நிலையில் காப்பாற்றப்பட்டு ஹபராதுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் அதே பகுதிய்யச் சேர்ந்த 55 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார். இதுகுறித்து ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-6)

# அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி அதிகரிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தனது உற்பத்தியளவை அதிகரிக்கவுள்ளது. அமைச்சர் ஸ்ரீபால டி சில்வாவின் பணிப்புரைக்கமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் தைரொக்ஸின் மருந்து உள்ளூரிலேயே தயாரிக்கப்படுகிறது. வருடாந்தம் இரண்டு கோடி 40 இலட்சம் தைரொக்ஸின் மருந்து வில்லைகள் தேவைப்படுவதாக கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

இது உள்ளூரில் தயாரிக்கப்படுவதன் மூலம் பெருந்தொகையான நாணய மாற்றுவிகிதம் சேமிக்கப்படுவதுடன் மாற்றக்குறையும் பெருமளவில் நீக்கப்படும்.

அடுத்த மாதம் முதல் இந்த மருந்துகள் உள்ளூரில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என குறிப்பிடப்படுகிறது. (ஓ-4)

# குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதை ஓரளவு நிவர்த்தி செய்யும் முகமாக கெயார் என்ற பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனத்தின் நிதி யுதவியுடன் தேசிய குடிநீர் வடிகால் அமைப்பு சபையினர் வாடகைக்கு பௌசர்களை அமர்த்தி குடிநீர் விநி யோகத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு விநியோகிக்கப்படும் நீரானது மக்களின் தேவையை முழுமையாக நிறைவு செய்வதாக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-22)





யாழ். போதனா வைத்தியசாலையின் வேண்டுகோளின். பேரில் யாழ். பாதுகாப்பு படைகளின் தளபதியின் வழிகாட்டலில் 511, 512 மற்றும் 513 ஆகிய படை பிரிவுகளில் கடமையாற்றும் இராணுவ வீரர்களின் இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் படையினர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதையும் இரத்ததானம் செய்வதற்காக படையினர் வரிசையில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உடுவில் உதவிப் பிரதேச செயலர் திருமதி உ. யசோதா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-30)

ராஜஸ்தானில் துயர சம்பவம்

# ஆற்றில் பஸ் கவிழ்ந்து 26 மாணவர்கள் பலி

(ஜெய்ப்பூர்)

சுற்றுலா சென்ற மாணவர்கள் பஸ் ஆற்றில் கவிழ்ந்தது. இதில் சிக்கி 26 மாணவர்கள் உயிரிழந்தனர். 38 பேர் காயத்துடன் உயிர்தப்பினர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மதர் இந்தியா ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தனி பஸ் மூலம் சுற்றுலா சென்றனர். ஆக்ராவுக்குச் சென்று பின்னர் மதுராவில் இருந்து திரும்பியபோது சவாய்மதோபுர் பகுதியில் உள்ள ஆற்றில் பஸ் கவிழந்தது.இதில் ஆற்றில் மூழ்கி 26 பேர் இறந்து போய்விட்டனர். காயத்துடன் உயிர் பிழைத்த 38 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மாநிலத்தில் இந்தச் சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.ஆற்றில் விழுந்த பஸ்ஸை மீட்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது.பல்வேறு பகுதிகளுக்கு சென்று குறிப்பாக முக்கிய கோயில்களுக்கு சென்று தரிசனம் செய்து வந்தபடி இருந்தோம். சுற்றுலாவை மிக மகிழ்ச்சியாக முடித்து திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது. எங்களது சக நண்பர்களை இப்படி இழப்போம் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை என உயிர் பிழைத்தவர்களில் ஒரு மாணவர் கூறினார். (6)

# தீவிரவாதி 'பெப்சி பொம்பர்' குஜராத்தில் கைதானார்

குஜராத் மாநிலத்தில் ''பெப்சி பொம்பர்'' என்று அழைக்கப்படும் தீவிரவாதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காஷ்மீரைச் சேர்ந்த இவர், காலியான பெப்சி கேனில் வெடிகுண்டு தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.


எனவே தான் இவர் ''பெப்சி பொம்பர்'' என்று அழைக்கப்படுவதைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாகிஸ்தானை மையமாகக் கொண்டு செயல்படும் ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத்தைச் சேர்ந்த இவரது உண்மையான பெயர் பஷீர் அகமது பாபா(32) என்பதாகும். குஜராத் மாநில தீவிரவாத ஒழிப்புப் பொலிஸார் இவரைக் கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் முழுவதும் தீவிரவாத நடவடிக்கைகளை விரிவாக்கும் முயற்சிகளிலும் தீவிரவாத இயக்கத்துக்கு இளைஞர்களைத் தேர்வு செய்து பாகிஸ்தானுக்கு அனுப்பும் வேலைகளிலும் இவர் ஈடுபட்டு வந்தவர் ஆவார்.

இதுவரை மூவாயிரம் பேரை இவர் இந்த பயிற்சிக்காக அனுப்பி வைத்துள்ளதாகவும், இதற்காக தலா ரூ. 15 ஆயிரம் வரை பாகிஸ்தானில் இருந்து ஊதியம் பெற்றதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (2)

# துறவியாகும் அண்ணன், தங்கைக்கு உறவினர்கள் ஆடிப்பாடி வரவேற்பு



(சேலம்)

துறவிகளாக மாற இருக்கும் ஜெயின் சமூகத்தைச் சேர்ந்த அண்ணன், தங்கைக்கு சேலத்தில் அவர்களது உறவினர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். மதுரையைச் சேர்ந்தவர் சூரஜ்மல்ஜி. அவரது மனைவி பிரசன்னதேவி.

இந்த தம்பதியின் மகன் தர்மேஸ்குமார் (20), மகள் குணவந்தி (18) அவர்கள் இருவரும் குஜராத் மாநிலம் பாலித் தனா என்ற இடத்தில் உள்ள ஜெயின் தலைமைப்பீடத்தில் 2010 மே 16 இல் துறவறம் மேற்கொள்கின்றனர்.

ஜெயின் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் துறவறம் ஏற்க முடிவெடுத்தால் தங்களது உறவினர் அனைவரது வீடுகளுக்கும் சென்று அவர்களது ஆசீர்வாதம் பெற்று வருவது வழக்கம். அதன்படி தர்மேஸ்குமார், குணவந்தி இருவரும் தங்களது உறவினர் வீடுகளுக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் சேலத்தில் உள்ள அவர்களது மாமா ஜெயந்திலால் வீட்டுக்கு இருவரும் வந்தனர்.இளம் வயதிலேயே உலக ஆசை களை துறந்து துறவிகளாக மாற இருக்கும் அவர் களுக்கு சேலம் ஜெயின் சமாஜம் சார்பில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அலங்கரிக்கப்பட்ட குதிரை பூட்டிய தேரில் இருவரையும் ஊர்வலமாக செவ்வாய் பேட்டையின் முக்கிய வீதிகள் வழியாக அழைத்து வந்தனர். ஊர்வலத்தில் வந்த ஜெயின் சமூகத்தினர் உறவினர்கள் அனை வரும் பாண்ட் வாத்தி யத்துக்கு ஏற்ப நடனம் ஆடியபடியே சென்ற னர். சாரட் வண்டி ஊர்வலம் சேலத்தில் அமைந்துள்ள மூன்று ஜெயின் கோவில் களுக்கும் சென்றது.

அங்கு நடந்த நிகழ்ச்சிகளில் அந்த சமூகத்தைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோர் துறவிகளாகும் இருவருக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சேலம் ஜெயின் சமாஜம் தலைவர் சாந்திலால், நேமித்சந்த், டிரஸ்டி துக்ராஜி உள்ளிட்டோர் முன்னிலையில் இவ்விழா நடந்தது. (ஓ-6)

# தமிழகத்தில் காங்கிரஸை முதன்மை கட்சியாகப் பலப்படுத்த வேண்டும்

## சோனியா வலியுறுத்து



(சென்னை)


கட்சி தேர்தலை அனைவரும் ஒற்றுமையாக இணைந்து, வெற்றிகரமாக நடத்தி முடிக்கவேண்டும். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியை முதன்மை கட்சியாக பலப்படுத்த வேண்டும் என தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவிடம் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா வலியுறுத்தினார். சென்னையில் புதிய தலைமைச் செயலக கட்டடத்தின் திறப்பு விழாவில் கலந்துகொள்ள சோனியா வருகை தந்திருந்தார்.

விழாவில் பங்கேற்பதற்கு முன், தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனுக்கு சோனியா திடீரென வந்தார். அவரை, தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, சட்டசபை காங்கிரஸ் தலைவர் சுதர்சனம், இளைஞர் காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் உஷா நாயுடு ஆகியோர் வரவேற்றனர். தங்கபாலு தலைவராக பொறுப்பேற்ற பின், ஏற்கனவே இருந்த தியாகிகள் அரங்கம் கட்டடத்தை இடித்து, ராஜிவ் பவன் என்ற பெயரில் புதுப்பித்து கட்டினார். அக் கட்டடத்தில் நடந்த இளைஞர் காங்கிரஸ் தேர்தல் ஓட்டுப் பதிவை சோனியா பார்வையிட்டார்.

பின், அங் கிருந்து மாநில தலைவர் அறைக்கு சோனியா அழைத்துச் செல்லப் பட்டார்.

அப்போது சத்தியமூர்த்தி பவன் கட்டடத்தின் உட்சுவர்களில் வரிசையாக மாட்டி வைக்கப்பட்டிருந்த காங்கிரஸ் தலைவர்களின் படங்களை சோனியா பார்வையிட்டார். சில தலைவர்களின் பெயர்களை அவர் தங்கபாலுவிடம் கேட்டறிந்தார். (ஓ-6)

# கரூர் அருகே குலோத்துங்க சோழன் கால கல்வெட்டு கண்டுபிடிப்பு



(கரூர்)

கரூர் மாவட்டம் கடவூர் அருகே தேவர் மலையில் குன்றின் மீது இருக்கும் குடிவண்டை நாயனார் கோயில் இடிந்த நிலையில் உள்ளது. இக் கோயிலில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியியல் மற்றும் தொல்லியல்துறை கழக உறுப்பினர் பாலசுப்பிரமணியன் ஆய்வு செய்தார். இதுபற்றி அவர் கூறியது, இக்கோயிலை மூன்றாம் குலோத்துங்க சோழன் கட்டி கும்பாபிஷேகம் செய்தார். இங்கு 2 கல்வெட்டுகள் உள்ளன. ஒரு கல்வெட்டில் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியாண்ட கி.பி. 1206 ஆம் அண்டில் தமிழ் விபவ ஆண்டு நிலம் தானம் கொடுத்த செய்தி சிறு பாறையில் எழுதப்பட்டுள்ளது. அண்டை பாதை வீட்டிற்கும் கிழக்கு, அய்யம்பாளையம் குடிவண்டைக்கும் வடக்கு, சீவிதாப்பட்டிக்கு தெற்கும், விளையும் விவசாய நிலத்தை குடிவண்டை நாயனாருக்கு கொடையாக வழங்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னொரு கல்வெட்டில், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் இறந்தபின் கி.பி. 1244ஆம் ஆன்டில் தமிழ் சார்வாரி ஆண்டு ஆவணி மாதம் மலையின் மீது கடும் தவம் செய்த வெங்கடாசல அடியான் இறந்தார். அவரின் விருப்பப்படி குடிவண்டை தேவதானத்திற்கு நிலம் தானமாக தெற்கு சின்ன கல்லுக் குழி, வடக்கு மதுக்கரை, கிழக்கு குதிரைக் கல், மேற்கு பத்துபட்டு வரை உள்ள பூமியை தர்மமாக நாயனாருக்கு வழங்கினார் என்று எழுதப் பட்டுள்ளது. தற்போது இந்த இடத்தை தட்டாண் காட்டு பாறை என்றும் 159 ஏக்கர் நிலத்தில் வட்டவட்டமாக கல்லினால் மேடை அமைத்து அதன் மீது கல் தூண் நடப்பட்டது. (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# சிறுபான்மையினருக்கு உள் ஒதுக்கீடு செய்யாமல் மகளிர் மசோதா நிறைவேற்ற விடமாட்டேன்

## லாலு பிரசாத் யாதவ்

(புதுடில்லி)

பீகார் மாநிலத்தில் நடந்த ராஷ்டிரிய ஜனதா தள பொதுக்கூட்டத்தில் லாலுபிரசாத் யாதவ் கலந்துகொண்டு பேசினார். அவர் கூறியதாவது,

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு கொடுக்கும் சட்ட திருத்த மசோதாவில் தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை இன பெண்களுக்கு உள் ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியும், பா.ஜ.கவும் அதை விரும்பவில்லை.

பாராளுமன்ற மேல் சபையில் பலாத்காரமாக மகளிர் சட்டதிருத்த மசோதாவை காங்கிரஸ் நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் பாராளுமன்ற மக்களவையில் அப்படிச் செய்ய இயலாது. பாராளுமன்றத்தில் மசோதாவை நிறை வேற்ற முயன்றால் நாங்கள் மத்திய அரசை கவிழ்ப்போம்.

மகளிர் மசோதாவை நிறைவேற்ற முயன்றால் முன்கூட்டியே தேர்தல் வருவது உறுதி. எனவே இடைத்தேர்தலை சாதிக்க நாம் அனைவரும் தயாராக இருக்கவேண்டும்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவில் சிறுபான்மைப் பிரிவு பெண்களுக்கு உள் ஒதுக்கீடு கொடுக்கப்படவேண்டும்.சமூக நீதி மறுக்கப்பட்டவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும்.

அத்தகைய உள் ஒதுக்கீடு செய்யாமல் மகளிர் மசோதாவைக் கண்டிப்பாக நிறைவேற்ற விடமாட்டேன். மீறி முயன்றால் என் பிணத்தின் மீது ஏறி நின்றுதான் அந்த மசோதாவை கொண்டு வரமுடியும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை மிக அதிகமாக உயர்ந்து விட்டது. அதில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே மகளிர் மசோதா விவகாரத்தை மத்தய அரசு கையில் எடுத்துள்ளது.இவ்வாறு லாலுபிரசாத் யாதவ் கூறினார். (ஓ-6)

# அமெரிக்கா சீன இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டு வருகிறது

## சீனப்பிரதமர் குற்றச்சாட்டு

(பீஜிங்)

சீனாவின் இறையாண்மைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிராக அமெரிக்கா செயல்பட்டு வருவதாக சீனப்பிரதமர் வென் ஜியாபோ குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்கள் கூட்டத்தில் வென்ஜியாபோ கூறியதாவது,

சென்ற ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றுக் கொண்ட பிறகு அமெரிக்க - சீன உறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆனால் தைவானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதன் மூலமும் திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமாவை ஒபாமா வெள்ளை மாளிகையில் சந்தித்ததன் மூலமும் சீனாவின் இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா செயல்பட்டுள்ளது. தைவானை ஒரு பயங்கரவாத பிரதேசமாக சீனா பார்க்கிறது. ஆனால் அமெரிக்காவோ தைவானுக்கு ஆயுதம் விற்பனை செய்கிறது.

அமெரிக்காவின் இந்தச் செயல் இரு தரப்பு உறவுகளை பாதித்துள்ளது. இதற்கு சீனா எந்த வகையிலும் பொறுப்பல்ல. இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஏற்கனவே இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைகள் தான் அமெரிக்க- சீன உறவுகளுக்கான அடித்தளம். அதன்படி அமெரிக்கா செயல்படும் என நம்புகிறேன். இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒத் துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனாவின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாக வேகமாக வளர்ந்து வருவது உண்மை. ஆனால் சீனாவை வளர்ந்த நாடு என்று கூற முடியாது. இன்னமும் வளரும் நாடாகவே சீனா உள்ளது. பீஜிங் மற்றும் ஸாங்காய் நகரங்களை மட்டும் பார்த்து சீனாவை வளர்ந்த நாடு என முடிவு செய்து விடக் கூடாது.

சீனாவில் நகர்ப்புறங்களுக்கும் கிராமப் புறங்களுக்குமான பொருளாதார இடைவெளி அதிகம் உள்ளது. இந்த நூற்றாண்டின் மத்தியில் தான் சீனா வளர்ந்த நாடாக மாறும். அதே சமயம் தற்போது உலகில் பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களை கையாள்வதிலும் சர்வதேச ஒத்துழைப்பிலும் சீனா முக்கிய பொறுப்புள்ள நாடாக திகழ்கிறது என்றார். (2-6)

# உள்ளங்கையில் கீபோர்ட்: கம்பியூட்டர் யுகத்தின் அடுத்த புரட்சி

(லண்டன்)



உள்ளங்கையில் வைத்து பட்டனை செல்லமாக தட்டினால் கம்பியூட்ட இயங்கத் தொடங்கும். நீங்கள் அதை இயக்கலாம். இன்டர்நெட் பார்க்கலாம். இ-மெயிலும் தரலாம். என்னது இப்படி ஒரு அதிசயமா என்று வியக்கிறீர்களா?

ஆம் கையடக்க.... இல்லையில்லை; உள்ளங்கை அடக்க மிகவும் சிறிய அளவில் ஸ்டிக்கர்வடிவ கீபோர்ட் வந்து விட்டது. இந்த புதிய கருவிக்கு ஸ்கின்புட் என்று பெயர். நம் காதால் கேட்க முடியாத மிகக் குறைந்த சத்தங்களைக் கண்டறியும் அடிப்படையில் இக்கருவி இயங்கும். நம் உள்ளங்கையில் இதை வைத்துக் கொண்டு லப்-டொப் கம்பியூட்டர் மொபைல் ஐபாட் ஆகியவற்றை இயக்க முடியும். மைக்ரோசிப் வடிவிலான புரஜக்டர்கள் தான் கீபோர்ட் வடிவில் இருக்கும். அதில் உள்ள பட்டன் களை நீங்கள் தட்டினால் அதிலிருந்து எழும் சத்தத்தை வைத்து அதற்கான விளைவுகள் திரையில் உருவாகும்.

முன்னங்கைகளில் எந்த இடத்தில் எந்த சிப் இருக்கிறதோ அந்த சிப்பில் உள்ள பட்டனை மிகவும் செல்லமாக நீங்கள் தட்டினால் போதும் என்ன எழுத்து வரவேண்டுமோ அதுவரும் வகையில் கைகளில் பல்வேறு கோணங்களில் பொருத்தப்பட்டுள்ள சென் சார்களிலிருந்து செய்தி கடத்தப்படும் வகையில் இந்தப் புதிய கருவி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருவி 20 வாடிக்கையாளர்களைக் கொண்டு சோதனை செய்யப்பட்டுள்ளது. விரைவில் இது சந்தைக்கு வரக்கூடும். (6)

# நீரை மட்டும் அருந்தி விரதமிருந்த பெண் மரணம்

(புளோரிடா)

மத வழிபாடொன்றை முன்னிட்டு பல வாரங்களாக நீரை மட்டும் அருந்தியவாறு மூடிய அறைக்குள் விரதமிருந்த 55 வயது பெண்மணி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் இடம் பெற்றுள்ளது.

பார்டோ நகரைச் சேர்ந்த எவெலின் போய்த் என்ற மேற்படி பெண்மணி கடந்த பெப்ரவரி 7ஆம் திகதியிலிருந்து நீரை மட்டும் அருந்தியவாறு மூடிய அறைக்குள் விரதமிருந்துள்ளார்.

எவெலினின் கணவர் ஜோன் போய்த் தேவாலயமொன்றில் போதகராக கடமையாற்றுகிறார்.

இந்நிலையில் தன்னை விரதம் முடியும் வரை தொந்தரவு செய்ய வேண்டாம் என எவெலின் தனது கணவரைக் கோரியுள்ளார். ஒரு மாதம் கழித்து அவரது அறையின் கதவை உடைத்து திறந்த போது அவர் இறந்திருக்க காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# டுபாயில் 25 ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழர்

(டுபாய்)

டுபாயில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழர் 25 ஆண்டு காலமாக சிறையில் வாடி வருகிறார். டுபாயில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 23 கைதிகளில் ஏழு பேர் இந்தியர்கள். இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படாததால் சிறையிலேயே காலம் தள்ளி வருகின்றனர்.

பால் ஜார்ஜ் நாடார் என்ற தச்சு தொழிலாளிக்கு 1985 ஆம் ஆண்டு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. ஆனால் இது நாள் வரை அவருக்கு தண்டனை நிறைவேற்றப்படாமல் சிறையிலேயே காலம் தள்ளி வருகிறார்.

இவரை போல மற்றொரு இந்தியர் அனில் மோத்யாதி (38) கடந்த 11 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பால் ஜார்ஜ் நாடார் தன்னுடன் பணிபுரிந்த பாகிஸ்தான் நாட்டவர்களுடன் சண்டை போட்டார். சண்டை முற்றி அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு தீ வைத்தார். இதில் அந்த வீடு தீப்பற்றி இரண்டு பெண்களும் ஏழு குழந்தைகளும் பலியாயினர். இதன் காரணமாக பால் ஜார்ஜுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இன்னும் தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

தண்டனை அறிவித்து 25 ஆண்டு காலம் சிறையில் இருந்து விட்டபடியால் தன்னை விடுவிக்கும் படி இந்திய தூதரகத்தின் மூலம் கருணை மனுவில் கேட்டிருந்தார். ஆனால் இவரது மனு நிராகரிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)




# ரஷ்யாவில் ஜனநாயக நடைமுறை முடக்கப்பட்டுவிட்டது -கோர்பசேவ்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஜனநாயக நடைமுறை முடக்கப்பட்டு விட்டது என முன்னாள் சோவியத் யூனியன் அதிபராக இருந்த கோர்பசேவ் ஜனநாயக நடைமுறைகளை மேற்கொண்டதன் விளைவாக கடந்த 91 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்தது.



இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பதாவது, ஜனநாயகத்தின் மூலம் தான் நாடு வளர்ச்சியடையும் என்பதில் எனக்கு கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை. சோவியத் யூனியன் உடைந்த உடன் ரஷ்யாவில் ஜனநாயக நடைமுறைகள் பின்பற்றப்பட்டன ஆனால் சமீபகாலமாக அந்த நடைமுறை இல்லை. ரஷ்ய அதிபர் புடின் முதல் முறையாக அதிபரான போது ஜனநாயக நடைமுறை இருந்தது. இரண்டாவது முறை அவர் அதிபரான போது ஜனநாயக நடைமுறைகளை காணவில்லை.

ரஷ்யாவின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவது பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை நவீனமயமான வளர்ச்சியடையும் ரஷ்யாவை உருவாக்க வேண்டும். ரஷ்யாவின் தற்போதைய நிலைமை கவலை அளிக்கிறது. அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. ஓரிடத்தில் மட்டுமே குவிந்து கிடக்கின்றன.

அதிகாரத்தில் இருப்பவர்கள் எடுக்கும் முடிவுக்கு பாராளுமன்றம் உடனடியாக ஒப்புதல் வழங்கி விடுகிறது. மக்களிடம் அதிகாரம் சென்றால் இன்னும் குழப்பம் மேலோங்கி விடுமோ என அதிகாரிகளும் ஆட்சியில் உள்ளவர்களும் பயப்படுகின்றனர். இந்த பயத்தை உடைத்தெறிய வேண்டும். அதிபர் மெட்வதேவோ பிரதமர் புடினோ சமீப காலமாக வளர்ச்சிப் பாதைக்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பொதுமக்களை அணுகாதவரை வளர்ச்சி என்பது தோல்வியில் தான் முடியும். வளர்ச்சி இல்லாவிட்டால் வழக்கம் போல் மக்கள் கடன் சுமையில் தான் மூழ்க வேண்டிருக்கும். இவ்வாறு கோர்பசேவ் கட்டுரையில் கூறியுள்ளார். (2-6)

# தாய்லாந்தில் அரசுக்கெதிராக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## ஒரு இலட்சம் பேர்வரை திரண்டனர்

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அரசாங்கத்தை பதவி விலகவும் புதிய தேர்தல்களை நடத்தவும் வலியுறுத்தும் வகையில் சுமார் ஒரு இலட்சம் பேர்நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர். இந் நிலையில் அரசாங்கம் பாதுகாப்பு நிமித்தம் சுமார் 40 ஆயிரம் படையினரையும் பொலிஸாரையும் வீதிகளில் குவித்திருந்தது.

2006 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சிகவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் தாக்ஸின் ஷின்வட்ராவின் ஆதரவாளர்கள் பலர் சிவப்பு ரி-சேர்ட் அணிந்தவாறு இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கேற்றனர்.


இந்நிலையில் பதவிவிலகும் நோக்கம் தனக்கு இல்லை என தாய்லாந்து அரசாங்கம் தெரிவித்தது. (2-6)



இந்தோனேஷியாவுக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா அடுத்த வாரம் செல்வதையொட்டி அங்கு பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக பயங்கரவாதிகள் பொதுமக்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருப்பது போலவும் இராணுவத்தினர் அவர்களை விடுவிப்பது போலவும் பரபரப்பு ஒத்திகை தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்றது.

# இழந்த உரிமை, தேசியவாழ்விற்காய் எமது குரல் என்றும் ஓங்கி ஒலிக்கும்

**அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது.**



சபைக்கு தலைமை தாங்கும் கௌரவ உறுப்பினர் அவர்களே! தற்போது அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை அவசர அவசரமாகக் கூட்டி விவாதங்களையும் பிரதி விவாதங்களையும் நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவிற்கு வந்து 10 மாதங்கள் கடந்த நிலையிலும் இந்த அவசர காலச் சட்டம் ஏன்? என்பது தான் மக்கள் மத்தியில் இன்று கேள்வியாக எழுந்துள்ளது. இது இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி ஆளுவதற்கான இந்தச் சட்டம் நிரந்தரமாகவே இருக்க வேண்டும் என அரசு விரும்புகிறது. இதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினராகிய நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். கண்டிக்கின் றோம்.

உலகிலே வாழுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று உரிமை வாழ்வு மற்றது அடிமை வாழ்வு .உரிமை வாழ்வு பற்றி எமக்கு அக்கறை உண்டு . இந்த அக்கறை யின் காரணமாகவே இன்று நேற்று அல்ல கடந்த 60 ஆண்டுகளாக சனநாயக முயற்சியில் அகிம்சை வழியில் போராடி வந்திருக்கின்றோம். உரிமை வாழ்வு என்பது மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வாழ்வதல்ல. மற்றவர்களுக்கு ஒதுங்கி வாழ்வதுமல்ல. மாறாக எமக்கே உரித்தான இந்த மண்ணில் சுதந்திரமாக, பாதுகாப்பாக பொருண்மிய சுபீசத்துடன் வாழ்வது தான். இதற்காகவே இந்த பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் குரல்கொடுத்துவந்திருக்கிறோம் .போராடி வந்திருகின்றோம்.

ஆனால் கடந்த 60 ஆண்டுகளாக இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த சிங்கள அரசியுல் கட்சிகள் சிங்கள பௌத்த பேரினவா தலைவர்கள் எமது மக்களில் அரசியல் அபிலாசைகளை வாழும் உரிமைகளை நிறைவேற்றினார்களா? இல்லை இல்லை ஒன்றுமே நடக்கவில்லை. மாறாக எமது நிலம் பறிக்கப்பட்டு, எமது மொழி புறக்கணிக்கப்பட்டு, கல்வி , வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டு எமது மக்கள் இனத்தின் பெயரால் மொழியின் பெயரால் ஆயிரம் ஆயிரமாக கொன்று குவிக்கப்பட்டார்கள். இது தான் உண்மை வரலாறு. இந்த வரலாற்றின் பின்னணியும் பிரதிப்பலிப்பும் தான் இன்றைய அவல நிலைக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் காரணமாகிறது.

இதன் காரணத்தால் தான் தோல்வி அடையும் நாடுகளின் வரிசையில் மீண்டும் இலங்கைக்கு உரிய இடம் உலகளாவிய ரீதியில் கிடைத்திருக்கிறது. இது இந்த நாட்டில் இடம்பெறும் ஆட்சி முறையின் சீத்துவத்தையும் மோசமான பொருளாதார கொள்கையையும் தனது நாட்டு மக்கள் எதைத்தான் உரிமை கோரும் ஒரு மக்கள் இனம் மீது அதிகொடிய இனப் பாகுபாடும் பாரபட்சமும் அடக்குமுறை , மனித உரிமை மீறல்களும் காரணமாக அமைந்துள்ளது. இந்த நிலையில் இருந்து சிங்கள தேசம் முதலில் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். மாற்றிக்கொண்டால் இந்த அவசர காலச்சட்டம் இந்த நாட்டிற்கு தேவைப்படாது என இச் சபையிலே கூறி வைக்க விரும்புகிறேன்.

தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட கொடிய போரின் துன்பங்களையும் பாரிய உயிர் இழப்புக்களையும் சொத்துதிழப்புக்களையும் எமது மக்கள் அனுபவித்துவிட்டார்கள். இனியும் இழப்பிற்கு ஒன்றுமில்லை. இவற்றையெல்லாம் உலகின் மனச்சாட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன. உண்மையி லேயே எமது மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டிய தருணங்களையும் உரிமைகளையும் எமது ஒற்றுமை இல்லாததால் இழந்திருக்கிறோம்.

வளமாக வாழவேண்டிய மக்களையும் இளைஞர்களையும் இளம் யுவதிகளையும் பிஞ்சுக்குழந்தைகளையும் எம் கண் முன் துடிக்கத்துடிக்க பறிகொடுத்துள்ளோம் என்றால் எங்களது தமிழினத்தினது அரசியல் வேறுபாடுகளும் பேதங்களும் குரோதங்களும் தான் இதற்கு இடமளித்துள்ளது. இது தமிழரின் தனித்துவமான வரலாறு அல்லது. தலைவிதி என்று கூறிவிட முடியாது.

எமது மக்களை இந்தத் துன்பத்தில் இருந்து மீட்டு அவர்களுக்கு நிம்மதியான அரசியல் வாழ்வை உறுதி செய்ய எமது மக்கள் விரும்பிய அரசியல் தீர்வை பெற்றிட சனநாயகம் என்கின்ற பலத்துடன் ஒற்றுமை அடைய ஒன்றிணைந்து குரல் கொடுப்பது தான் இன்றைய அவசரமும் அவசியமான தேவையுமாகும். நலிவுற்ற எமது மக்களின் எதிர்கால நலனுக்காக நாம் ஒன்று பட்டு செயற்படுவோம். வரலாறு ஒரு அரிய சந்தர்ப்பத்தை தந்திருக்கிறது. காலம் காத்திருக்காது . பலவீனமான எமது மக்கள் பலத்தைப் பெருக்க அனைத்துத் தமிழ் கட்சிகளும் தலைமைகளும் ஒன்று பட்டு ஒரு கொடியின் கீழ் ஒரு தலையின் கீழ் சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் எமது மக்களின் இழந்த உரிமைக்காக, தேசிய வாழ்விற்காக ஓங்கி குரல் கொடுப்போம் என்று அடித்துக் கூறு வோம்.

பிரித்தாலும் அரசியலுக்கும் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் விலை போடும் அரசியலுக்கும் மக்கள் தக்க பதில் கொடுக் கும் காலம் வந்திருக்கிறது. இத்தனை இழப்புக்களையும் இம் மக்கள் சந்தித்த போது எமது ஒற்றுமையைத் தான் எமது மக்கள் வேண்டி நிற்கின்றார்கள். நானும் மக்களின் நல் வாழ்விற்காக, அர சியல் விடுதலைக்காக என்றும் ஒரே தலைமையின் கீழ் உழைப் பேன் என இந்த வேளையில் கூறிக்கொள்கின்றேன்.

---

# எதிர்கால முன்னேற்றத்தை காட்டிக்கொடுக்கும் செயல்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

என்னையும் எனது அரசாங்கத்தையும் எந்தவொரு நபரும் விமர்சிக்க முடியும். ஆனால், நாட்டின் எதிர்கால முன்னேறத்தைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வைராக்கியம், குரோதங்கள் நிறைந்த அரசியல் யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, பலமிக்க பாராளுமன்றத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் லுணுகம் வெஹர மீனவக் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரைநிகழ்த்துகையில்,

நாட்டின் எதிர்கால அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பொதுமக்களின் பங்களிப்பும் இன்றியமையாததாகும். நாட்டு மக்களை மறந்து எந்தவொரு ஆட்சியாளரும் ஆட்சி புரிய முடியாது. இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெறும் மக்களது ஆணையைக் கொண்டு நாட்டைமென் மேலும் வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்வதே எனதும் அரசாங்கத்தினதும் கொள்கையாகும்.

ஒருகாலத்தில் நகரத்தில் மட்டும் மையப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகள் கிராமங்கள் தோறும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. பாதைகள், பாலங்கள் மட்டுமன்றி கல்வி அபிவிருத்தித் திட்டங்களும் அரசாங்கத்தினால் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் இளைய தலைமுறையினர் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவர்களையும் உள்வாங்கி எமது தாய்த் திருநாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்ல நாமனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றுபட வேண்டும் என்றார். (2-6)

---

# உலகவங்கியினால் வழங்கப்படும் நிதியுதவி ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கு மட்டுமே

## ஸ்ரீ.ல.மு.கா.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக வங்கியினால் வழங்கப்படும் நிதி உதவி ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு மட்டும் வழங்கப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது. உலக வங்கியினால் வழங்கப்படும் வீட்டுக் கடன்கள் குறிப்பிட்ட சில தரப்பினருக்கு மட்டும் வழங்கப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் அசன் அலி தெரிவித்துள்ளார்.

நிதி உதவி வழங்கும் நடவடிக்கைகளின் போது எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் உதா சீனம் செய்யப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

உலக வங்கியின் நிதியே இவ்வாறு வீட்டுக்கடனுக்காக உள்நாட்டு அதிகாரிகளினால் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் இந்த கடன்கள் வழங்கப்படுவகாக அவர் கெரிவிக்கள்ளார். (ஒ-6)

---

# திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 30 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு ''ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்''(Ways to Improve Efficiencies) என்ற தலைப்பில் முகாமைத்துவக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளதால் அதில் கலந்து பயன்பெறும் பொருட்டு அன்றைய தினம் ஆர்வலர்கள் அனைவரையும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-2)

---

# தபால் மூல வாக்களிப்பிற்கு 4இலட்சத்து 15432 பேர் தகுதி

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு நான்கு இலட்சத்து 15 ஆயிரத்து 432 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனாதிபதி தேர்தலைவிட இம்முறை 14 ஆயிரத்து 314 பேர் கூடுதலாக தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை தபால் மூல வாக்களிப்புக்கு நான்கு இலட்சத்து 77 ஆயிரத்து 110 பேர் விண்ணப்பித்திருந்தபோதும் 61 ஆயிரத்து 678 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மேலும் தேர்தல் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

முட்டாள்தனத்தை மூலதனமாகக் கொண்டு–செயல்படும் எந்தக் காரியமும் வெற்றீட்டித்தராது. –பெல்ஜியம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழர் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது!

இலங்கையில் இனப்பிரச்சினை கிடையாது. இங்கு பயங்கரவாதமே உண்டு எனக் கூறியவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க.

இக் கருத்து டி.பி.விஜயதுங்கவால் வெளிப்படையாகக் கூறப்பட்டாலும் இக் கருத்தே இலங்கை ஆட்சியாளர்களின் அசைக்க முடியாத நினைப்பென்பது தெரிந்த உண்மை.

தற்போது இந்த நாட்டின் பிரதமராக இருக்கின்ற ரட்ணசிறி விக்கிரமநாயக்க இனப்பிரச்சினை என்று கூறினால் கடுப்படைந்து விடுவார். அந்தளவுக்கு இனப்பிரச்சினையில் அவருக்கு வெறுப்பு.

இதற்கு மேலாக ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, பௌத்த பீடங்கள் என எல்லாமே தமிழர்களுக்கு எதிரான போக்கைக் கொண்டவை.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வென்பது ஒருபோதும் சாத்தியப்படாத விடயம். இந்த உண்மை தெரிந்தமையால்தான் தந்தை செல்வநாயகம், தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த மெய்ம்மை எல்லோருக்கும் தெரிந்ததாயினும் அரசியல் சீவியத்திற்கு இனப்பிரச்சினை என்ற ஆயுதம் தேவையாகவுள்ளது.

இதனால் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது என்று கூறும் அளவுக்கு நிலைமையை உருவாக்கியுள்ளது.

அன்புக்குரிய வேட்பாளப் பெருமக்களே! எதுவும் சொல்லுங்கள், ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் தயாராகி விட்டது என்று மட்டும் கூறாதீர்கள்.

தமிழர்களுக்கு விடிவு கிடைப்பதற்கு நீங்கள்தான் நாடாளுமன்றம் போக வேண்டும் எனகூறுவதாயின் முன்பு நாடாளுமன்றம் சென்ற நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்க வேண்டியதாகவிருக்கும்.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதாக இருந்தால் முன்னைய அகிம்சைப் போராட்டத்தில் அல்லது பின்னைய விடுதலைப் போராட்டத்தில் கண்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டிலும் சாத்தியப்படாத ஒரு பெரும் விடயம், நேர்மையில்லாத–ஒற்றுமையில்லா–கடுமையான சூழமைவில் ஒருபோதும் சாத்தியப்பட மாட்டாது.

ஆக, வேட்பாளர்கள் தாங்கள் நாடாளுமன்றம் சென்றால் என்ன செய்ய முடியும் என்ற இயலுமை அறிந்து பேசுக. அதுவே சுகந்தரும்.

# சிறிய நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டக்கட்டமைப்பை ஏற்படுத்த திட்டம்

## மத்தியவங்கி நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சிறியளவிலான நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கான புதிய சட்ட கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய புதிய சட்டகட்டமைப்பினூடாக நாட்டின் சிறியளவிலான நிதி நிறுவனங்களின் பங்களிப்பை தேசிய அபிவிருத்தி செயற்பாட்டுக்கு பெற்றுக் கொள்ளமுடியுமென மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கென விசேட ஒழுங்குபடுத்தல் அதிகார சபையொன்றை நிறுவும் பொருட்டு புதிய சட்டங்கள் உள்ளடக்கப்பட்ட சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதி சலுகைகளை வழங்கும் நிதி நிறுவனங்களை சிறியளவிலான நிதி நிறுவனங்கள் என வகைப்படுத்தப்படுவதாக குறிப்பிட்ட அவர் ஏனைய நிதி நிறுவனங்கள் போன்று ஒழுங்குபடுத்தல் சட்டக் கட்டமைப்புக்குள் உட்படுத்த எண்ணியுள்ளதாக தெரிவித்தார்.

இத்தகைய சிறியளவிலான நிதி நிறுவனங்கள் சிலவேளை மக்களிடம் இருந்தும் வெளிநாடுகளிடமிருந்தும் நிதியை பெற்றுக் கொள்கின்ற அதேவேளை சிலசந்தர்ப்பங்களில் இந்த நிதி உரியவாறு முகாமைத்துவம் செய்யப்படுவதில்லை என வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய சட்டக்கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் இத்தகைய நிதி நிறுவனங்களை மேலும் வலுவூட்டி நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஓ-4)

## சரத்பொன்சேகாவை மறந்து விட்டனர்

### அனோமா பொன்சேகா

(கொழும்பு)

சரத்பொன்சேகாவுக்கு கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்கிய சில கட்சிகள் தற்போது அவரை மறந்து விட்டதாக சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்போது பொன்சேகா வேறொரு கட்சியில் இருக்கும் போது அவரது விடுதலை தொடர்பில் எதுவும் செய்ய முடியாது என ஐக்கிய தேசிய கட்சி கூறிவரும் நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எனினும் குறிப்பாக எந்த கட்சியும் அவரை விடுவிப்பது தொடர்பில் அக்கறை கொள்ளவில்லை என உறுதியாக தெரிவிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சில கட்சிகள் தம்மிடம் சரத் பொன்சேகா தொடர்பில் விசாரிக்கவில்லை எனவும் இதனை தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னர் அனைத்து தரப்பினரும் தமக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சரத் பொன்சேகாவின் நிலவரம் குறித்து விசாரித்து வந்ததாகவும் ஆனால் தற்போது அவர்களின் வேலைப்பழு நிமித்தம் அவ்வாறு யாரும் விசாரிப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## மஹாகும்பாபிஷேகம்

உடுப்பிட்டி அருள்மிகு பத்திரகாளியம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பூர்வாங்கக் கிரியைகளோடு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்களும் யாக பூஜை வழிபாடுகள் நடைபெற்று 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.35 சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 5 மணிக்கு விசேட உற்சவம் நடைபெற்று சுவாமி வெளிவீதியுலா இடம் பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (2-6)

## முன்வைப்புத்திறன் போட்டியில் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

***இலங்கையைப் பாதுகாப்போம், பூமியைப் பாதுகாப்போம்*** என்ற விடயம் தொடர்பான முன்வைப்புத்திறன் (Presentation) போட்டியில் வேலணை மத்திய கல்லூரியைச் சேர்ந்த தரம் 10 இல் கற்று வரும் மாணவி செல்வி மனோகரலிங்கம் லதாயினி வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (இ)

## மேமாதம் முதல் அரச ஊழியர்களுக்கான இடமாற்றம்– பொது நிர்வாக அமைச்சு

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை 2010 ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்களின் வருடாந்த இடமாற்றங்களை மே மாதம் மூன்றாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த வேண்டுமென பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுல்படுத்தப் படவிருந்த இவ்விடமாற்றங்கள் ஜனாதிபதித் தேர்தல் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் என் பவற்றுக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்ட இடமாற்றங்களே மீண்டும் மே 03 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஒரு சேவை நிலையத்தில் ஐந்து வருடமும் அதற்கு மேலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இவ்விடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவர்.

தனது சொந்த வதிவிடத்தில் இருந்து தூரப் பிரதேசத்தில் உள்ள அலுவலகமொன்றில் நீண்டகாலம் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள காரியாலயமொன்றுக்கு இடமாற்றம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறே தமது வதிவிடப் பிரதேசத்தில் மிக நீண்டகாலம் கடமையாற்றிய ஒருவரை தூரப் பிரதேசமொன்றுக்கு இடமாற்றம் செய்வதுடன் ஒரு திணைக்களத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்ற அனுமதிக்கக்கூடாது எனவும் கண்டிப்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

பதவி நிலை தரத்தில் அதிகாரிகள் அல்லாத அனைவரும் இவ்விடமாற்றத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க மேலும் அறிவுறுத்தியுள்ளார். (2-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்




### மதமும் ஒழுக்கமும்

நீ தெய்வத்தன்மை நிறைந்தவனாகவே எப்போதும் இருந்து கொண்டிருக்கிறாய். எப்போதும் ஒரு தீர்க்கதரிசியாகவே இருக்கிறாய். கடவுளாக இருக்கிறாய்– என்று இங்கு அத்வைத முறையில் சுவாமிஜி குறிப்பிடுகிறார்.

கடவுள் உனக்கு உள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் நீ பல கோயில்களையும் ஆலயங்களையும் கட்டிக்கொண்டிருக்கிறாய். மேலும் எல்லாவிதமான கற்பனைப் பிதற்றல்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறாய். மனித உடலிலுள்ள மனித ஆன்மா ஒன்றுதான் வழிபடவேண்டிய ஒரே கடவுளாகும். எல்லா விலங்குகளுங்கூடத் தெய்வத்தின் கோயில்கள் தான். ஆனால் மனிதனே இவற்றுள் மேலானவன். கோவில்களில் தாஜ்மகாலைப் போல மனிதன் உயர்ந்தவன். கடவுளை நான் அத்தகைய கோவிலில் வழிபட முடியவில்லை என்றால் வேறு எந்தக் கோயிலும் எனக்கு எவ்விதப் பயனையும் தரப் போவதில்லை.

# எனது இனத்தின் உரிமைக்காகவும் மறுவாழ்வுக்காகவும் போராட வேண்டும்

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் சிறிதரன்



*தமிழகத்தில் இருந்து வெளிவரும் உன்னதம் என்ற அரசியல் இலக்கிய இதழுக்காக ஈழத்து எழுத்தாளர் பிரதீபன் நடத்திய நேர்காணலில் வேட்பாளர் சிவஞானம் சிறிதரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். சமகால அரசியல் நிலவரங்கள் அவரது அரசியல் பிரவேசம், வன்னியில் நடந்த கோரமான யுத்தம் என்று பல விடயங்களைக் குறித்து இந்த நேர்காணல் அமைந்திருக்கிறது. இதனை எமது வாசகர்களுக்காக இங்கு முழுமையாக தருகிறோம்.*

**கேள்வி : - தொடர்ச்சியாக போராட்ட சூழலில் வாழ்ந்து வந்திருக்கின்றீர்கள். தொடர்ந்து போருக்கு இரையாகிய வன்னியில், கிளிநொச்சியில் வாழ்ந்திருக்கிறீர்கள். உங்களது வாழ்வுக்கு போர் எத்தகைய அனுபவங்களை தந்திருக்கின்றன. எத்தகைய மாற்றங்களை தந்திருக்கின்றன அடுத்த கட்டத்திற்கு செல்லும் நம்பிக்கையை எப்படி உருவாக்கிக்கொண்டீர்கள்?**

பதில்:- எனக்கு அறிவு தெரிந்த காலத்திலிருந்து ஏறத்தாழ மூன்று தசாப்த காலங்கள் முழுமையான போருக்குள்ளேயே வாழ்ந்து வந்திருக்கின்றேன் .தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடைகள், பாரிய இராணு வத் தாக்குதல் , தொடர்ச்சியான ஏதிலி வாழ்க் கை, சொத்துக்களை இழந்து அல்லது சூறையாடப்பட்டு நிராதரவான நிலை உலகமே எங்களை அநாதைகளாக்கிய நிலை என்று யோசிக்கும் அளவுக்கு போரின் வடு என்னை புடம் போட்டிருக்கிறது.

கண்ணுக்கு முன்னே கண்ட கொடிய போரின் அவலங்கள் உலகில் எங்குமே நடந்திருக்காது என்றுதான் எண்ணுகிறேன். என்றாலும் எமது உரிமைகளுக்காக நாங்கள் பிறந்து வளர்ந்து அள்ளி விளையாடிய மண்ணுக்காக மரபு வழித் தாயகத்திற்காக இறுதி மூச்சு வரை குரல் கொடுக்க வேண்டும் என்ற பேரவா மனதில் உள்ளது.

நாங்கள் மலைபோல் நம்பியிருந்த போராட்டம் நம்பிக்கைத் துரோகங்களாலும் காட்டிக் கொடுப்புக்களாலும் அழிக்கப்பட்டு தமிழினம் தனக்கென ஒரு தலைமைத்துவம் இல்லாது அரசியல் அனாதைகளாக ஒடுங்கி வாழும் இன்றைய சூழலில் எனது இனத்தின் உரிமைக்காக, மறுவாழ்வுக்காக இயன்ற வரை பாடுபட வேண்டும் என்ற எண்ணமே எனது அரசியல் பிரவேசமாகிறது.

**கேள்வி: - இறுதிப்போரில் உலகத்தில் நடந்திராத மீறல்களும் கொலைகளும் நடந்திருக்கின்றன. அந்தப் போரில் அகப்பட்டு பல்வேறு துயரங்களை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள் இறுதிப்போரில் நிகழ்ந்த அனுபவங்களை பல்வேறு வகையில் பதிவு செய்து வருகிறார்கள். உங்களது அனுபவங்களை பகிரக்கூடிய நிலையில் இருக்கிறார்களா? அந்தப் போரையும் அது நிகழ்த்தப்பட்ட முறையையும் எப்படி பொருத்திப் பார்க்க விரும்புகிறீர்கள்?**

பதில்:- பாவிலாறு தொடக்கம் முள்ளி வாய்க்கால் வலைஞர்மடம் வரை தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இறுதிப் போர் என்பது வரலாற்றில் மறக்க முடியாத ஒன் றாக உள்ளது. போர் என்பது வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாகும்.

இலங்கையின் ஹிரோசிமா நாகசாகியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளன. 2008 ஆம் ஆண்டின் ஆவணி முதல் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தபால் சேவையை கிளிநொச்சிக் கிளை செய்து வந்தது. அதன் செயலாளராக நான் இருந்தேன். 2009 ஜனவரி 8 ஆம் திகதி தபால் பொதியுடன் வவுனியா வந்து பின்னர் பாதை மூடப்பட்டதால் போக முடியாத சூழலில் வவுனியாவில் தங்கியிருந்தேன். எனது மனைவி தன் வயிற்றிலே 7 மாதங்கள் நிரம்பிய குழந்தையுடனும் ஏனைய 4 குழந்தைகளுடனும் யுத்தத்தின் இறுதி வாசல் வரை சென்று பின் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய நலன்புரி முகாமில் வசித்து அங்கிருந்து மே மாதம் வவுனியா வைத்தியசாலையில் குழந்தையை பிரசவித்தார். ஒவ்வொரு தமிழனும் அனுபவித்த மரண வேதனையை எனது குடும்பமும் அனுபவித்தது. தமிழர்களின் உரிமைப்போர்- பயங்கரவாதம் எனும் அர்த்தம் பூசப்பட்டு அவர்கள் வாய்பேசாத ஊமைகளாக்கப்பட்டனர்.

தமிழர்கள் தமக்கான அதிகாரம், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணய உரிமை , மரபுவழித் தாயகம் பற்றி ஏதும் பேசக் கூடாது என்பதற்காக தமிழர்கள் மீது யுத்தம் ஆக்கிரமிக்கப்பட்டது. உலகத்தில் எங்குமே நடக்காத ஈவிரக்கமற்ற யுத்தமாகும். கொத்துக்குண்டுகளும் தொடர் செல் மழைகளும் உணவுக்காக ஒரு நேர கஞ்சிக்காக காத்திருந்த மக்களை அரசு காவுகொண்ட கோர யுத்தம் இதன் மூலம் அவர்கள் திருப்தி அடைந்தார்கள் என்பதுதான் முக்கிய விடயம்.

**கேள்வி:- வன்னி மக்கள் பலர் தொடர்ந்தும் தடுப்பு முகாமில் தடுக்கப்பட்டுள்ளார்கள். பல மக்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தடுப்பில் உள்ளார்கள். நீங்கள் தடுப்பு முகாமில் தங்கியிருந்த பொழுது ஏற்பட்ட அனுபவங்கள் எப்படி இருக்கின்றன? இன்றைய வாழ்வுச் சூழலில் தடுப்பு முகாம் வாழ்க்கை எத்தகைய நிலையில் இருக்கிறது? முகாமிலிருந்து வெளியில் வரும் பொழுது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

பதில் :- வயல் வளம் அள்ளிக்கொடுக்க, கடல் வளம் கைகொடுக்க, தென்னை, மா, பலா , பனையுடன் நாங்கள் கையேந்தாது ஈழத்தின் பல பாகங்களில் வாழ்ந்தவர்களுக்கு அரிசியும் கடலுணவும் கொடுத்து செழிப்போடு வாழ்ந்த மக்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு தமது சொத்துக்களை இழந்து, அங்கங்களை இழந்து, கூடியிருந்தவர்களின் உயிர்களை இழந்து , மனம் பேதலித்தவர்களாக தறப்பாள் கொட்டகைகளில் யாரோ கொடுக்கும் அரிசிக்காகவும் தண்ணிக்காகவும் எந்தநாளும் வரிசையில் காத்து வாழும் வாழ்க்கை எப்போழுது தமது சொந்த வீடுகளில் நிம்மதியாக வாழ்வோம் என்ற ஏக்கப்பெருமூச்சு இது தான் தடுப்பு முகாமில் தொடரும் வாழ்க்கை.

**கேள்வி:-போர் அல்லது போராட்டச் சூழலில் வாழ்ந்துவிட்டு அரசியலுக்குள் பிரவேசிக்கிறீர்கள். நாடாளுமன்ற அரசியலில் ஏன் இறங்கத் தீர்மானித்தீர்கள்? ஈழத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக இறங்குவது எப்படி முக்கியம் பெறுகிறது?**

பதில்:- இன்று தமிழர்களின் அரசியலில் கூட தலைமைத்துவம் அழிக்கப்பட்டு அவர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளார்கள். கிளிநொச்சி மாவட்டம் கடந்த 30 வருடங்களாக எந்தவொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருக்கவில்லை.

எமது மாவட்ட மக்களினதும் தமிழ் மக்களினதும் அரசியல் உரிமைக்காக, வாழ்வுரிமைக்காக குரல் கொடுக்கவேண்டிய தேவை இன்று ஒவ்வொரு தமிழ் புத்தி ஜீவிகளுக்கும் உண்டு. இந்த நிலையில் காலத்தின் தேவையால் எனது அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

அதிலும் இன்று தமிழர் உரிமைக்காக விடுதலைப்புலிகளின் காலத்திலிருந்து தராகி டி. சிவராம், ஜோசப்பரராசசிங்கம், சட்டவாளர் ரவிராஜ் போன்றோரின் பெரு முயற்சியாலும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளால் கட்டிணையாக்கப்பட்ட கட்சி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு . பலரின் தியாகமும் இரத்தமும் வேர்வையும் கலந்து உருவாக்கப்பட்டு தமிழர் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சி என்பதால் அதன் ஊடாக அரசியலில் களமறிங்கி னேன்.

**கேள்வி:- ஈழத்தமிழ் அரசியல் கட்சிகளை அழிக்கவும் ஈழத்தமிழ் அரசியல் வலுவை சிதைக்கவும் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை அல்லது சூழ்ச்சிகளை மேற்கொள்வதை பார்க்கமுடிகின்றது. இந்த எண்ணத்தை இலகுபடுத்தும் வகையில் சிலதமிழ்க்கட்சிகளும் அரசியல்வாதிகளும் செயற்படுகிறார்கள் போலத் தெரிகிறது. இவை எத்தகைய ஆபத்தை ஈழத் தமிழ் அரசியலில் ஏற்படுத்தும் என கருதுகிறீர்கள்?**

பதில்:-தமிழர்களின் பேரம்பேசும் ஆற்றலை இல்லாதொழிப்பதே இன்று தமிழ் மண்ணில் பல கட்சிகள் சுயேட்சைகுழுக்களாக களமிறக்கப்பட்டதன் அர்த்தமாகும். தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலில் காட்டிய ஒற்றுமையை இத் தேர்தலில் முழுமையாக காட்டவேண்டும்.

தமிழர்களுக்கு ஒருதீர்வு கிடைப்பதென்றால் அது ஒற்றுமையின் கீழே யே கிடைக்கும். படிப்படியாக எங்களுடைய இன அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. எங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகிறது. மொழியை மூன்று தரத்தில் கூட வைத்து பார்க்கமாட்டார்கள் போலுள்ளது. மாறி மாறி வரும் சிங்கள அரசுகள் துங்களுக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் தமிழர்களை அழிப்பதில் தமிழர்களின் மொழி கலாசாரத்தை சிதைத்து உரிமைக்குரலை நசிக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றன.

ஆனால் தமிழர்கள் குறிப்பாக புத்திஜீவிகளை பணத் திற்காக, பதவிக்காக , இனத்தைக் காட்டிக் கொடுக்கும் இன அடையாளத்தை அழிக்கும் செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதுதான் வேதனை. இந்நேரம் எம் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஒன்று பட்டு உழைக்கவேண்டும். ஒரே அணியின் கீழ் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண் டும்.

**கேள்வி:-போரின் பிறகு ஈழத்தமிழர்களின் அரசியலில் என்ன ஓட்டம் இருக்கப் போகிறது? கனவுகள் நிறைவேறாத சூழலில் ஈழப்போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இனி ஈழ அரசியலில் வரும் பிரதிநிதிகள் எத்தகைய பங்கை ஆற்ற வேண்டும்?**

பதில்:-கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான ஈழப் போரில் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும் 40ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளையும் இந்த மண்ணில் விதையாக்கியிருக்கிறோம். இன்று தம் பிள்ளைகளுக்கு ஒரு மெழுகுவர்த்தி கொழுத்தி ஆறுதலடையக்கூட அவர்களின் தாய் , தந்தை , சகோதரங்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.அப்பாவி இளைஞர், யுவதிகள் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறையில் இருக்கிறார்கள். ஏதுமறியா அந்த அப்பாவிகளில் பல்கலைக்கழக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், புனர்வாழ்வு என்ற பெயரில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பல தாய் தந்தையருக்கு தம் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்பது கூடத் தெரியாது. அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதைக்கூட அறிய முடியாத சூழல், வன்னியில் முழுச் சொத்துக்களும் சூறையாடப்பட்டுள்ளன. தாங்கள் வசதியாக, சந்தோசமாக வாழ்ந்த வீடுகளின் அத்திவாரங்களைக் கூடப்பார்க்க முடிய வில்லை.

எல்லாவற்றையும் இழந்து 12 தகரத்திற்குள்ளும் தறப்பாள்களுக்குள்ளும் அடிமைகளாக, வெறுமையாக, ஒடுங்கி வாழும் வாழ்க்கைதான் கிடைத்திருக்கிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு , மன்னாரின் மடுப்பிரதேசம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களின் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள், பாரவூர்திகள், சிற்றூர்திகள், பேருந்துகள், உழவு இயந்திரங்கள் இவற்றுக்கு என்ன நடந்தது. இந்த நிலையில் ஈழ அரசியலில் வரும் பிரதிநிதிகள் எதை முன் வைப்பார்கள் என்பது பிரச்சினைதான் இவ்வளவும் நடந்தும் எந் தத் தீர்வும் இல்லாமல் பழைய வாழ்க்கைக்கு போயுள்ள மக்களுக்கு தங்களை தாங்களே நிர்ணயிக்கக் கூடிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுப்பதே முதல் பணியாகும்.

புலத்தில் வாழும் தமிழர்களையும் நிலத்தில் வாழும் தமிழர்களையும் இணைத்து மாறி வரும் உலகச்சூழலுக்கேற்ப உலக அரங்கில் எமது உரிமைப்பிரச்சினையை விளக்கித் தீர்வு காணப்படவேண்டியது மிக முக்கியமான எமது கடமையாகும்.

நேர்காணல்
பிரதீபன்
முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

**கேள்வி:- இந்தத் தேர்தலில் உங்களது வாக்குறுதிகள் எப்படி அமைகின்றன? அவை எந்தளவு ஈழ மக்களின் வாழ்வு, கனவு, நம்பிக்கை, ஏக்கம் என்பனவற்றில் பொருத்தி நிற்கின்றன? அவற்றை எப்படி சாதிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்:-எமது மக்களுக்கான உரிமைகளுக்காக, படிப்படியாக , எல்லோரையும் இணைத்து தமிழர்கள் ஓரணியாகி விடுதலைக்காக , நிம்மதியான வாழ்வுக்காக. எமது அடையாளத்தை காப்பதற்காக குரல் கொடுத்து தீர்வு ஒன்றை விரைவாக அடையவேண்டும்.

எல்லாவற்றையும் இழந்து நிர்க் கதியாக நிற்கும் -தலைமைத்துவமும் சிதறடிக் கப்பட்டு வெறுப்பு , விரக்தி நிலைக்கு தள்ளப் பட்டுள்ள மக்களுக்கு நீதியான வாழ்வுக்கு உதவ வேண்டும் என்பதே எனது நோக்கம்.

நன்றி: *உன்னதம்* அரசியல் இலக்கிய இதழ்.

# சேவாக் அதிரடி அரைச்சதம்; டில்லி டேர் டேவில்ஸ் வெற்றி

(அகமதாபாத்)

சேவாக்கின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

இப் போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தொடரில் இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.

இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடை பெற்று வருகிறது.

இதில் நேற்று அகமதபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் ஆறாவது போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர் டேவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜன்ஜன்வல ஆட்டமிழக்காமல் 45 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 53 ஓட்டங்களையும் டோக்ரா 26 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் ஓஜா 24, சிமித் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மகரூப், நான்ஸ், மிஷ்ரா மற்றும் சாங்கவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி சேவாக்கின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 17.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 142 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் வீரேந்திர சேவாக் 34 பந்துகளில் (8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் தினேஸ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மஸ்கரன் கஸ் 2 விக்கெட்டுக்களையும் பட்டேல், ஷேன்வோர்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணியின் சேவாக் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று 4 புள்ளிகளைப் பெற்றது.

# ஒற்றுமைச் சுற்றுலா சிறிலங்கா மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் மவுண்ரன் சைக்கிள் சம்மேளனமும் சைக்கிள் பந்தய சம்மேளனமும் இணைந்து நடத்தும் ஒற்றுமைச் சுற்றுலா சிறிலங்கா சைக்கிள் ஓட்டப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இன்று பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் மவுண்ரன் சைக்கிள் சம்மேளனத் தலைவர் கமால சூரியகே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் மவுண்டன் சைக்கிள் சம்மேளனம் இணைந்து நடத்தும் ஒற்றுமைச் சுற்றுலா சிறிலங்கா சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இதில் பயிற்றப்பட்ட ரைடர் சைக்கிள் வீரர்கள் கலந்து கொள்ளும் அதிவேக சைக்கிள் ஓட்டம் நாளை காலை 7.30 மணிக்கு பருத்தித்துறை கடற்படைத் தளத்தில ஆரம்பமாகி பருத்தித்துறை வீதியூடாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கு வந்து ஏ-9 வீதியூடாக கொடிகாமம் சந்தி வரை சென்று மறுபடியும் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானதை வந்தடைந்து 80 கிலோ மீற்றர் தூரம் பந்தயத்தில் கலந்து கொள்கின்றனர்.

இச் சைக்கிள் ஓட்ட நிகழ்வில் 20 தேசிய கழகங்களை சேர்ந்த 125 ரைடர் சைக்கிள் ஓட்ட வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதில் கடற்படை, தரைப்படை, பொலிஸ், விமானப்படை வீரர்கள், மாவட்ட மட்ட கழகங்களின் வீரர்கள் பங்கு கொள்கின்றனர்.

இவ் வீரர்கள் நாளை மறுதினம் மதவாச்சியிலிருந்து கண்டிவரையும் 20ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்பு-களுத்துறை-மாத்தறை வரைக்கும் 21ஆம் திகதி மாத்தறை-அம்பாந்தோட்டை வரைக்குத் மொத்தம் 700 கிலோ மீற்றர் அதிவேக மவுண்ரன் சைக்கிள் ஓட்டத்தில் பங்கு பற்றுகின்றனர்.

இதைவிட யாழ். மாவட்டத்தில் பாடசாலை மட்டம், திறந்த மட்டத்தில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடை பெறுகின்றது. இதில் பாடசாலைகள் மட்ட 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் மற்றும் திறந்த மட்ட ஆண், பெண் பிரிவுகளாக சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெறுகிறது. இதில் யாழ். மாவட்டதில் 440 பாட சாலைகள் பதிவு செய்துள்ளன.

இப்பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 5 மாணவ மாணவிகள் கலந்து கொள்வர். இந்நிலையில் திறந்த மட்ட 19 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் பிரிவினருக்கான பதிவுகள் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் காலை 9 மணி முதல் நடைபெறும்.

அத்துடன் பதிவு செய்தவர்களுக்கான போட்டியாளர் இலக்கங்களும் வழங்கப்படும் எனவும் மவுண்ரன் சைக்கிள் சம்மேளனத் தலைவர் கமால சூரியகே தெரிவித்தார். (ச-5)

# வன்னிப் பாடசாலைகளின் மாணவர்கள் தமது பாடசாலை ஊடாக விண்ணப்பிக்கவும்

## கல்விவலயப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பாடசாலைகளில் கல்வி கற்று தற்போது யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் இவ்வருடம் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வன்னி பாடசாலைகளில் கல்விகற்று யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து தற்போது யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் இவ்வருடம் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சை விண்ணப்பங்களை தமது நிரந்தர பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

அதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் மடு கல்வி வலயப்பாடசாலைகளில் தமது பாடசாலையூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

இதன் மூலமே தமது மாவட்டத்திற்கான பரீட்சை வெட்டுப்புள்ளி முறையின் மூலம் நன்மையடைய முடியும்.

இதனால் வன்னிப்பாடசாலைகளில் கல்விகற்ற இவ்வருடம் தரம்-5 புலமைப் பரீட்சை, க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது நிரந்தரப் பாடசாலைகள் ஊடாக பரீட்சை விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

இதற்கான பணிகளை வன்னிப் பாடசாலை அதிபர்கள் மேற்கொள்வர். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் க.பொ.த. உயர்தரபரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தமது முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம், நிரந்தர பாடசாலையின் பெயர், தெரிவு செய்த பாடங்கள், உட்பட்ட விபரங்களுடன் எம்மால் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் திகதிகளில் உரிய இடங்களுக்கு வருகை தந்து பரீட்சை விண்ணப்பங்களை பூரணப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்.

எனினும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடை பெறும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் வசதி கருதி அவர்கள் தற்போது கற்கும் பாடசாலைகளின் அதிபர் விபரங்களை சேகரித்து தமது வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்பிப்பார்.

இதன் போது பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் முழுப் பெயர், பிறந்த திகதி, தற்போதைய பாடசாலையின் பெயர், நிரந்தர பாடசாலையின் பெயர் ஆகியவற்றை சேகரித்து வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ். மாவட்ட வலயக்கல்வி அலுவலகங்கள் எம்மால் அறிவிக்கப்படும்போது அவற்றை உரிய இடங்களில் சமர்பிக்க வேண்டும்.

எனவே மாணவர்களின் நன்மை கருதி உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கான 2010ஆம் கல்வி ஆண்டுக்கு ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கற்கை நெறிகளுக்கு நடத்தப்பட்ட தகுதிக்காண் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

### ஆங்கிலம்

ரி.ரட்ணகோபால்-நல்லூர், கே.செல்லத்தம்பி-இராமநாதன் வீதி, எஸ்.நடராஜா-சுழிபுரம், டி.சுவார்ணிக்கா-சுழிபுரம், ஜே.நிறஷா-கோப்பாய், எஸ்.சுபாங்கி-இணுவில், எஸ்.சங்கீதா-கொடிகாமம், ரி.சுப்பிரமணியம்-அரியாலை, பி.ஜானகி-மொரட்டுவ, ரி.தாரணி-மானிப்பாய், எஸ்.அபிராமி-சுண்டுக்குளி,

கே.விநாயகமூர்த்தி-பண்டத்தரிப்பு, வி.துஜீவா-தலையாழி, ஆன்.குயின்ரீனா -மானிப்பாய், எஸ்.துஷாந்தி-உரும்பிராய், எஸ்.ஸ்ரானிஞ்லால்-யாழ்ப்பாணம், எ.ஜீவதாஸன்-அரியாலை, கே.ஜெனகன்-காரைநகர், வி-புவி-ஊரெழு, சி.மேரிபிரான்ஸிகா -ஆனைக்கோட்டை, ரி.கிறிசோ-மானிப்பாய்.

எஸ்.ஆர்த்திகா-சுன்னாகம் மேற்கு, ஜி.தனேசன் -சுழிபுரம், ஆர்.சாம்பசிவம்-நல்லூர், ஜே.தயாநிதிவேல்-வல்வெட்டித் துறை, வி.கோமகள்-மானிப்பாய், ஆர்.மதியொளி-பருத்தித்துறை, ஜே.சங்கீதா-கல்வியங்காடு, ஏ.மேரிகலிஸ்ரா-சுண்டுக்குளி, ஜே.செல்லத்துரை-உடுவில், எஸ்.சிந்து-கோண்டாவில், சி.கே.கிறிஸ்ரின் பானுமதி-இளவாலை, எஸ்.டிலக்ஷா-நல்லூர், ரி.சற்குணசிங்கம்-சுன்னாகம், எஸ்.அஜிதா-மல்லாகம், கே.பரமானந்தம் -உரும்பிராய், எம்.சோமஸ் கந்தராசா-சாவகச்சேரி, ஜி.பசுபதி அளவெட்டி, எம்.மயூரா-அச்சுவேலி, ஜே.சி.ஜெயேந்திரா-அக்பர் மாவத்தை கொழும்பு-2, பி.சிந்துஜா-கந்தர்மடம், எஸ்.சோமகாந்தி-மீசாலை, ஜி.மெறில்டா-வட்டுக்கோட்டை, எஸ்.சுஜிர்தா-ஆனைக்கோட்டை, எஸ்.மகிந்தன்- சுன்னாகம்.

ஏ.சேகர்-நவாலி வடக்கு, பி.சுமிதா-சுழிபுரம், எம்.சொரூபினி -அரியாலை மேற்கு, வை.தாட்ஷா -நல்லூர் வடக்கு, ஏ.ராஜிதகிரீசன்-சுன்னாகம் ,

### தொழில்நுட்பம்
### யாழ்ப்பாணம்

டபிள்யூ.ஞானதயாளன்-பண்டத்தரிப்பு, ஜி.குகநாத்-சண்டிலிப்பாய், ரி.ரட்ண கோபால் -நல்லூர், கே.சேதுகாவலர்-யாழ்ப்பாணம், எ.சோமேஸ்வரன்-கோப்பாய், எஸ்.சண்முகலிங்கம்-மீசாலை, ஐ.அனிஜா-சங்கானை, என்.பஞ்சலிங்கம்-சுன்னாகம்,

எஸ்.ஸ்ரானிஸ்லாஸ் -இராஜேந்திரா வீதி யாழ்ப்பாணம், ஆர்.நற்குணம் -பருத்தித்துறை, எஸ்.ரதீசன்-கொலுவில், பி.சிந்துஜா-கந்தர் மடம், எஸ்.பமிலா-சித்தன்கேணி, என்.சுப்பிரமணியம்-சுன்னாகம் மேற்கு, எஸ். வைதேகி -கலட்டி, பி.பரமநாதன்-வரணி, எஸ்.சிவசக்தி -நீர்வேலி, எஸ்.தெய்வேந்திரம்-தொண்டைமானாறு, ரி.கோபிநாத்-நாவலர் வீதி, கே.சசிரேகா-சாவகச்சேரி, ஏ.யுசானி-வட்டுக்கோட்டை, ஜி.பாலகுமரேசநாதன்-ஆனைக்கோட்டை,

எஸ்.ஆர்த்திகா-சுன்னாகம், வி.கங்கா-யாழ்ப்பாணம், எஸ்.கபலினி-சாவகச்சேரி, எஸ்.செந்தூரன்-வட்டுக்கோட்டை, ஆர்.லக்ஸியா-மானிப்பாய், பி.மதுஷான்-கொக்குவில், ஜே.பாலதேவன்-யாழ்ப்பாணம், ஏ.சர்மிலன்-சங்கானை, ரி.சுகந்தன்-யாழ்ப்பாணம், ஜி.லதீகரன்-மானிப்பாய், எம்.சொரூபினி-அரியாலை மேற்கு,

வி.மதிவதனி-மானிப்பாய், பி.துஜநிதா-யாழ்ப்பாணம், ரி.பிரியதர்ஷன்-புலோலிமத்தி, எம்.ரவிசாந்-அரியாலை மேற்கு, கே.தவரத்தினம்-பெரிய அரசடி, சாவகச்சேரி, ஆர்.சுகந்தினி-சாவகச்சேரி, எஸ்.பாலச்சந்திரன்-ஊர்காவற்றுறை, ஜே.கவிதரா-அளவெட்டி ஆர்.ஜே. ஜெனிபர்-யாழ்ப்பாணம், ரி.சர்னியா-கோப்பாய் ,

வி.சதர்மதி-புத்தூர் ,பி.சர்வகுணசீலன்-கோண்டாவில், என்.நித்தியா-காரைநகர், பி.எஸ்.பிரியதர்ஷினி-சுழிபுரம் பி.தீபா-அளவெட்டி ரி.சுரேகா-நீர்வேலி ,ரி.ராஜலிங்கம்-மானிப்பாய், பி.ஜானகி-மொறட்டுவ, என். சகிலா -உடுப்பிட்டி, பி.தர்ஷிகா-யாழ்ப்பாணம், எம்.பிரசன்னா-சாவகச்சேரி, பியி.கெனமன்-பாஷையூர்,

### முல்லைத்தீவு

பி.எச்.எல்.ஐ.சமரசிங்க-பெலவத்த, ஆர். உதயராஜசிங்கம்-புன்னை நீராவி விசுவமடு ,என்.சுஜீபன்-முல்லைத்தீவு, எஸ்.விஜிதா-முல்லைத்தீவு ,எம்.யோகேஸ்வரி-மல்லாவி .

### மன்னார்

ஏ.ஆர்.றிஸ்தா-புத்தளம் ,ஜி.ஏ.பெனிஸ்-மன்னார் ,எம்.டி.பிரகாசம்-மன்னார், ரி.நிரோஜினி-மன்னார்., எம்.என். நௌஷீதா-புத்தளம்

### கிளிநொச்சி

ரி.கதிர்காமநாதன்-மீசாலை, எஸ். மேனகா -காரைநகர், எம்.மயூட்றி-சுன்னாகம், ஆர்.திலீப்குமார்-கிளிநொச்சி (ச-3)

நாவாந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.



# தனிநாடு அல்லாத தீர்வை...

பெற்றுக் கொள்ள அது தயாராகியுள்ளது. 25 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற ஆயுதப் போராட்டம் முறியடிக் கப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பு இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

முன்னர் விடுதலைப்புலிகளின் ஆதர வைக் கொண்டிருந்த இந்தக் கட்சி தற்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குக் காணி, நிதி மற்றும் சட்டநிர்வாகங்களைக் கொண்ட அதிகாரம் உள்ள தீர்வைப் பெறத் தயாராக வுள்ளதாக அறிவித்துள்ளது.

பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் அரசினால் தாம் இனப்பாகுபாட்டுடன் நடத் தப்படுவதாக தமிழ் மக்கள் தெரிவித்து வரு கின்றனர்.

அவர்கள் சுயாட்சி அதிகாரத்தைக் கோரிய போதும் அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என அரசு மறுத்து வருகின்றது. 225 உறுப் பினரைக் கொண்ட இலங்கை நாடாளுமன் றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 22 உறுப்பினர்களை முன்னர் கொண்டிருந்தது.

போரில் இடம்பெயர்ந்த 3 இலட்சம் தமிழ் மக்களின் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற் றம் தொடர்பிலும் அது கோரிக்கை விடுத் துள்ளது. அவர்களில் ஒரு இலட்சம்பேர் தற்போது முகாம்களில் வசிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களில் சிலர் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தங்கி யுள்ளனர். மேலும் பலர் ஒழுங்கான அடிப் படை வசதிகள் வழங்கப்படாது அவர்களின் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பதவியுயர்வு

(நல்லூர்)

வட பிராந்திய தபால் திணைக்கள நிர்வாக அதிகாரியாக கட மையாற்றிய த. புஷ்பநாதன் வவு னியாமாவட்டதபால் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற் றுள்ளார். (ச-3,134)

# தபாலகங்கள் மீள ஆரம்பம்

(நல்லூர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டி சுட்டான் தபாலகமும் வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி தபாலகமும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாக வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் த.புஷ்பநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் பரந்தன், முல்லைத்தீவு, முள் ளியவளை தபாலகங்களும் மீளத் திறக்கப் படும் எனவும் மேலும் பல தபாலகங்களும் விரைவில் திறக்கப்படும் எனவும் தெரிவித் தார். (ச-3,134)

# தெல்லிப்பழை வைத்திய...

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் முரளி தரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு வலி. வடக்குப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றிய பின் னர் அப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது.


இந் நிலையில் கடந்த 20 ஆண்டுகளாக தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மானிப்பாயிலும் மற்றும் தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலையிலும் இயங்கி வந்தது.

இந் நிலையில் யாழ்.அரச அதிபர் க. கணேஷ் யாழ். மேல் நீதிமன்ற நீதி பதி இ.த. விக்ன ராஜா ஆகியோர் யாழ்.கட்டளைத் தளபதியி டம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நேற்று தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மீள ஆரம்பிக்க அனுமதித்ததுடன் பொதுமக்கள் எதுவித சோதனைகளுமின்றி சொந்த வாக னங்களிலும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட போக்குவரத்து சேவைகளிலோ பயணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையிலேயே யாழ்.மாவட்டத்தில் புற்றுநோய், மனநோய்க்கான சிகிச்சைப் பிரி வுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மரண அறிவித்தல்

## செல்வரஞ்சன் செல்வரட்ணம் (ரஞ்சன்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட அன்னார், காலஞ்சென்ற சாமுவேல் சின்னத்துரை செல்வரட்ணம் காலஞ்சென்ற வயலா புஷ்ப ராணி ஆகியோரின் அன்பு மகனும், நாளாயினி இராஜ ரட்ணத்தின் (அவுஸ்திரேலி யா) அன்புச் சகோதரனும்,

ஜோராஜரட்ணத்தின் (அவுஸ்திரேலியா) அன்பு மைத் துனரும், Dr.கருணை ஜீவரட்ணம் (நியூசிலாந்து) காலஞ்சென்றவர்களான ஜீவராஜா ஜீவரட்ணம், பால் ராஜ் ஜீவரட்ணம், யோகம் குணராஜ் (திருகோணமலை), தீபம் அருட்பிரகாசம், மலர் ஐங்கரம்பிள்ளை ஆகியோ ரின் பெறாமகனும்,

ரஞ்சிதமலர் (வட்டுக்கோட்டை), சவுந்தரராணி (ராணி- அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற குணரட்ணம், அரச ரட்ணம் (அவுஸ்திரேலியா), ஜெயரட்ணம் (கனடா), பாலரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்து னரும் P.தெய்வேந்திரத்தின் அன்புக்குரியவரான அன் னார் 15.03.2010 (திங்கட்கிழமை) அதிகாலை கர்த்தருள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 16.03.2010 (செவ் வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லமான 32, கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக வட்டுக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
N.A.விமலேந்திரன்
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

இல.32, கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. (சி-4669)

# யாழ்ப்பாண...

நள்ளிரவுவரை அவரிடம் மேலதிக தக வல்களைப் பெறமுடியவில்லை.

இச் சம்பவம் தொடர்பில் சாவகச் சேரிப் பொலிஸாரும் தகவல் தர மறுத்து விட்டனர். (ச-5)

# மாங்குள...

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோத னையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# மகிந்த...

யாழ்ப்பாணத்துக்கு வரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட் பாளர்களுக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்புக் கான பிர சார நடவடிக்கைக ளுக்காக ஜனாதி பதி மகிந்த ராஜ பக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின் றார்.

யாழ். வரும் அவர், தனது கட்சி வேட்பா ளர்களின் பிரசாரக் கூட்டங் களில் கலந்து கொள்வார். (ச-5)

# கண்ணீர் அஞ்சலி



எங்கள் கல்லூரி அதிபர்
திரு. N.A. விமலேந்திரன் அவர்களதும்
எங்கள் கல்லூரி மூத்த ஆசிரியர்
திருமதி அனோஜி விமலேந்திரன் அவர்
களதும் அன்பு மைத்துனருமான

## திரு.செல்வரஞ்சன் செல்வரட்ணம் (ரஞ்சன்)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த வேதனை கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற ஆண்டவரை பிரார்த்திக்கின் றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி சமூகம்
வட்டுக்கோட்டை.

(சி-4670)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.